உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰சு { விக்கிரம—கார்த்திகை } மலர் ௮


| | | |
|---|---|---|
| க. | பொழிற்றொண்டர் கருத்துரைகள் | 283 |
| உ. | கலைச்சொல் லாக்கம் | 285 |
| ௩ | தமிழ்ச் செய்திகள் | 288 |
| ச. | சுவடி மதிப்பு | 289 |
| ரு. | நீரரமகளிர் இன்னிசைப் பாடல்<br>உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் | 291 |
| சு. | சிலப்பதிகாரமும் கிரேக்க நாடக வியலும்<br>திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ. | 297 |
| எ. | சங்க காலத்து அங்கதம்<br>திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் | 306 |
| ௮. | நன்கொடைகள் | 314 |
| கூ. | காட்சி யளவை<br>திரு. த. இராமநாத பிள்ளை, பி. ஏ. (இலண்டன்) | 315 |
| ௰. | கலைச்சொல் லாக்கம்<br>திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி. | 323 |
| ௰க. | தொல்காப்பியம்—பொருள் | 1—4 |


பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவ்சாகிப்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

கரந்தைக் கூட்டுறவு மின் இயக்கிப் பதிப்பகம், தஞ்சை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௰௬ | விக்கிரம—கார்த்திகை | மலர் ௮ |
|---|---|---|

உ

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்

நம் சங்க அன்பர்களிற் சிலர் இலங்கைக்குச் சென்று வந்த விவரங்களைக் குறித்தெழுதுகையில், தமிழ்ப் பொழில், விக்கிரம-புரட்டாசி மலர், 204-ஆம் பக்கத்தில், அங்குள்ள 'இளைஞர்களிற் பலர், தமிழ் கற்கும் ஆர்வத்தோடு, இங்கிருந்து சில ஆசிரியர்களை அழைத்துச் சென்று..........தமிழிலக்கியங்களைப் பயில்வதைப் பெரிதும் பாராட்டினார்கள்...............தமிழ் கற்க வேண்டுமென்று எண்ணுவார் தொகைக்கு ஏற்ப, அங்கு ஆசிரியர்கள் இல்லாத குறையும் புலப்பட்டதாம்.' என்று கூறினோம்.

இக் கருத்து, தமிழ் வளமும், ஆசிரியர் திரளும் பொருந்திய யாழ்ப்பாணம் முதலிய இலங்கை நாட்டுத் தமிழ்ப் பகுதிக்குப் பொருந்தாதென்று, சென்னைப் பல் கலைக் கழகத்துக், கீழ்க்கலை யாராய்ச்சி நிலையத்துத் தமிழ்ப் பேரறிஞர் திரு. அ. வி. மயில் வாகனர், பி. ஏ. (இலண்டன்), எழுதுகிறார். ஆம்; பொருந்தாதுதான். தமிழ்ப் பொழிலில் யாம் எடுத்தெழுதியுள்ள 'வீரகேசரி' யுரையானும், எம் குறிப்பானும், நம் அன்பர்கள் பார்த்து வந்தது, திரு. மயில்வாகனர் எண்ணும் வண்ணம், கொழும்பு முதலிய இலங்கை நாட்டுத் தென் பகுதியே என்பது போதரும். போதரவே, நம் அன்பர் கொண்ட கருத்துக்களும் அப்பகுதிக்கே பொருந்துவதாம்.

சென்னை மண்டல அரசியலார் நிறுவிய கலைச் சொல்லாக்கக் குழு அரசியலாருக்கு அனுப்பிய அறிக்கையைக் குறித்துத், தமிழ்ப் பொழில் ஐப்பசி மலரில், அவ்வறிக்கையிற் கண்ட கருத்துக்களெல்லாம் ஒப்பத் தக்கன வல்லவென்றும், தமிழ் மக்கள் அக்கருத்துக்களை நன்காராய்ந்து, தக்க முறையிற் கிளர்ச்சி செய்து, கலைச்சொற்கள் தமிழில் அமையும் வழியைத் தேடவேண்டுமென்றும், நம் சங்கம் இந்த வழியில் தலையிட்டு வழிகாட்ட எண்ணியுள்ளதென்றும் கூறினோம்.

இவ்வண்ணமே, பெருமை மிக்க வீரத்திரு. வீ. எஸ். சீனிவாச சாத்திரியாரைத் தலைவராகக் கொண்ட இந்தக் கலைச் சொல் லாக்கக் குழுவின் அறிக்கையைப் பின்னும் ஊன்றி ஆராய்ச்சி செய்தோம். நம் சங்க அன்பர் சிலரைக் கொண்டும் ஆராயச் செய்தோம். இவ் வாராய்ச்சிகளின் பயனாகத் தோன்றிய கருத்துக்களை வரைபடி (Draft) யாகப் பிறிதோரிடத்தில் தந்துள்ளோம். தமிழன்பர்களும், தமிழ்க் கழகங்களும், தாம் தாமும் இக் கருத்துக்களை ஆராய்ந்து, வேண்டும் மாறுதல்களுடன், முடிபுகளாக்கி, அரசியலாருக்கு விண்ணப்பம் செய்து குறையிரந்து கொள்வார்களென்று நம்புகிறோம். பள்ளி ஆசிரியர்களும், நூலாசிரியர்களும், பதிப்பாளர்களும் இத்தகைய குறையிரத்தல் விண்ணப்பப் படியில் கையொப்பமிட்டு, அரசியலாருக்கு அனுப்பிக், கிளர்ச்சி செய்து, தமிழ்ப் பாதுகாப்புத் தொண்டு புரிவர்களாக.

இந்த விண்ணப்பப் படி வேண்டுவோர், ஓரணா அஞ்சற்றலை அனுப்பி, எமக்கெழுதிப் பெறலாம்.

*To*

**The Secretary to the Government of Madras,**

***Department of Education,***

***MADRAS.***

*Sir,*

I/We beg to bring the following for your kind consideration and immediate action. The Government of Madras published, some seven years ago, Scientific and Technical Terms and their equivalents in the chief languages of the Presidency. As the terms so published in Tamil were found quite unsuitable for school and popular usage, the Madras Presidency Tamil Sangam, after consulting almost all the organisations and individuals interested in the work, and after utilising the services of hundreds of scholars of all shades of opinion, brought out, with the help and encouragement of the Governments of Madras, Ceylon and Travancore, the University of Madras and the South Indian Teachers' Union, a set of Tamil terms, entitled Kalai Chorkkal, which were recommended for school use by the Director of Public Instruction, in his R. C. 2406 G. 38 dated 22—11—38. As a result, the terms are not only being used by teachers in their classes and by authors and publishers in their text books approved by Text Book Committees, but are also gaining currency in the speeches and writings of the public of the Tamil Nad and are bidding fair to establish themselves both in popular and literary usage. Under the circumstances, any sudden change in principle and practice, can only bring in confusion, trouble and loss to all concerned. Yet, the Government appointed a so-called "Committe of Experts" on 8—6—40 for "Standardising the Terms" in all the languages of the Presidency at one stretch and in one lump, and the recommendations of the committee involving a drastic change in ideas and ideals, have already been accepted by the Government. Before the Government proceed to appoint special committees for each language, I/We request that the recommendations be set aside for the following reasons:—

(1) In my/our opinion, the "Committee of Experts", appointed by the Government, is

(a) quite *unrepresentative*, as only men, having a special and definite leaning towards English and Sanskrit terms, have been packed into the committee, and as men, conversant witht he true spirit and genius of each language and especially of the Tamil Language and its Philology, Etymology and Grammar, and men, who had done some work on the line, have been deliberately excluded, so that they are conspicuous by their absence.

(b) *meagre*, as fifteen men cannot seal the fate of so many languages in a few hours.

(c) quite *incompetent*, as their knowledge, especially of Tamil and Dravidian Philology, is precious little and hence, by no stretch of imagination, they may be called " experts " though they are undoubtedly great, each in his own sphere of activitiy, which, unfortunately, has nothing to do with the coinage of scientific and technical terms in the mother tongue.

(2) The terms of reference to the committee are :—

(a) *narrow*, as they refer to 'educational purposes' in the first sentence and 'school purposes' in the very next sentence and never to 'popular purposes' in any sentence.

(b) *ambiguous*, as the expression " equivalents of certain foreign technical terms for all the South Indian Languages" may mean the languages taken individually or together.

(c) *faulty*, as the question of "*retaining* the use of English terms" does not arise, as, at present, the English terms are not being used in teaching the non-language subjects in the mother tongues.

(3) The recommendations of the Committee are:

(a) quite *arbitrary*, as the Committee has given no reason for choosing Sanskrit roots for certain kinds of terms and English terms themselves for all the other terms.

(b) *inconsistent*, as the advocates of Arabic and Persian roots for Urdu, should have, if unbiassed, recommended only Dravidian roots for all the Dravidian languages and as their attempt at uniformity for *all* the languages has not afiected " the terms now in use in lower secondary classes " and the " conceptional or abstract names or ideas".

(c) *unscientific*, as direct borrowing, if borrowing is necessary, is better than borrowing through an intermediary dead language, like Sanskrit, to which all the English terms are equally foreign and strange.

(d) *unsuitable*, as the bodily transliteration of English terms would sound hideous to read in the midst of a Tamil sentense, would be incapable of being written or spelt in the mother tongues properly, would undergo changes in pronunciation which would make them even unrecognisable and rediculous, would be a dead weight in the language quite incapable of any further derivatives, especially, verb forms being formed out of them, and would hamper the spread of scientific knowledge among the masses.

(e) *short sighted*, as the Committee has not the foresight to see that the mother tongue will soon come to its own and one day, not in the distant future, will displace English as the medium of instruction even

in the University and advanced stages and that, then at least, it will be readily conceded that teaching scientific and technical subjects in the mother tongue using Sanskrit and English terms, is as bad as teaching the subjects themselves through a foreign medium.

(f) *impractical*, as any such attempt at uniformity in various languages taken together will end only in dismal failure, as the efforts of the Joint Committee on Grammatical Terminology, the various Grammatical and Spelling Reform Societies in England, America and even Madras Presidency have failed and as no such standardisation for various languages in common, was attempted or dreamt of either in Madras as the Government seem to claim or in the more allied languages of the most advanced continent of Europe.

(g) *wilful*, as they refer to, and direct the attention of, the various special committees to the developments in this direction in Trvancore, Mysore, Hyderabad, Andradesa etc., for improving all the other languages but not to any development in Tamil Nad, though, perhaps, the 'developments' in Tamil have been more well pronounced and popular and though Tamil knowing members preponderate in the committee and hold influential positions too !

Hence, I| We request the Government that the recommendations of the Committee be not given effect to, that fresh committees of specialists for each language be appointed with a view to popularise scientific ideas among the masses as well and to standardise the terms in each language taken by itself and that, in the meanwhile, to avoid confusion, it may be proclaimed that the terms in Kalai Chorkkal may be used without any fear of sudden change, not only by teachers, authors and publishers, but also by S. S. L. C. examiners and their translators whose attention, it seems, has yet to be drawn to the very existence of the same.

I /We beg to remain,

Sir,

*Your Most Obedient Servant(s).*

# தமிழ்ச் செய்திகள்

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்: பட்டமளிப்புப் பேரவைக் கூட்டம் (Convocation), 16—11—40.** இன்னிசைத் தமிழ்ப் பாடல்களைத் தமிழ் நாட்டு மக்கள் விருப்புடன் பயிலுதற் பொருட்டுப், பதினாயிரம் வெண்பொற் காசுகளைப், பல்கலைக் கழகத்தினரிடம், செட்டிநாட்டு மன்னர் வீரத்திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் மனமுவந்து கொடுத்தனர்.

பல்கலைக் கழகத் தலைவர் பெயராலும், வீரத்திரு. கூர்மா வேங்கடரெட்டி நாயுடு அவர்கள் பெயராலும், சென்னை உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி யவர்கள் பெயராலும், வீரத்திரு. ஆர். கே. சண்முகஞ்செட்டியார் அவர்கள் பெயராலும் பரிசுகள் வழங்குதற்கு வைப்புநிதிகளாய் முறையே, ரூ. 1000, ரூ. 500, ரூ. 500, ரூ. 500 தொகைகளை அவர்கள் வைத்திருக்கின்றனர்.

இக்கருவூலங்களை வைத்து ஆண்டுவரவும், செட்டி நாட்டு மன்னர் அவர்களின் எண்ணங்கள் நிறைவேறவும், திறமை பெற்ற கலைவாணர்களைத் தேர்ந்து, கழகம் அமைக்க வேண்டுமென்பதும் அவர்களின் விருப்பம்.

**இலங்கையி லுள்ள ஒரு தமிழ் உயர்தரக் கல்லூரியின்** தலைமை யாசிரியராகத் தொண்டாற்றிவரும் திருவாளர் கா. பொ. இரத்தனம் அவர்கள், முதலாவதாக இலங்கை யரசியலாரின் பொருளுதவி பெற்றுச், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சி செய்ய வந்துள்ளார்கள். 'தமிழ் யாப்பின் வளர்ச்சி' என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றார்கள். இவர்தம் ஆராய்ச்சி மூன்றாண்டுகட்கு ஒப்புதல்பெறும் எனக் கருதப் பெறுகிறது. உரிய காலத்தில் தமிழ்ப்பணி செய்ய முன்வந்த இலங்கை யரசியலாரை யாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

## சுவடி மதிப்பு.

க. **யாப்பருங்கல மூலம் & யாப்பருங்கலக் காரிகை மூலம். வெளியிட்டவர்:** திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தமிழாசிரியர், சித்தாந்த வித்தியாசாலை, தென்குடித் திட்டை. விலை; மூன்றணா.

திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை கல்வி பயிலும் பொழுது அடைந்த துன்பம் ஏனையர்க்கு இன்பம் பயக்கின்றது. மாணவர்கள் எப்பொழுதும் கையில் வைத்துக்கொண்டு, நேரம் கிடைத்த பொழுதெல்லாம் பாடம் பண்ணுதற்குத் தகுதியாகச், சிறிய, அழகிய வடிவில், திருத்தமாகவும், நன்றாகவும் அச்சிடப்பெற்றுள்ளது இச்சுவடி. அவர்கள் வெளியிட விருக்கும் யாப்பருங்கல விருத்தியையும், யாப்பருங்கலக் காரிகைப் பழைய உரையையும் தமிழுலகம் மகிழ்ந்தேற்கும்.

உ. **ஞானசம்பந்தர் திருப்பள்ளி யெழுச்சியும் திருவேரக வருக்கமாலையும். ஆசிரியர்:** தேவகோட்டைப், பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார்.

இவ்வாசிரியரைத் தமிழுலகம் நன்கறியும். இச்சுவடி இவ்வாசிரியரது அறிவின் திறத்தையும், சொல் வளத்தையும், தமிழ்த் தொண்டு நலத்தையும், சிவநெறிப் பற்றையும் புலப்படுத்துகின்றது. செந்தமிழ்த் தொண்டையே தம் விருப்பத் தொழிலாகக் கொண்டுள்ள திரு. இராமநாதன் செட்டியார் பல்லாண்டு பல்லாண்டு வாழவும், இத்தகைய சிறந்த தமிழ்ச் சுவடிகள் பலப்பல வெளிவரவும் இறைவன் திருவருள் துணை புரிக.

௩. திருக்குறள்-நாட்குறிப்பு: வெளியிட்டவர்: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, (6, பவளக்காரத்தெரு, சென்னை.) விலை: அ. 5½, 6½.

இக்குறிப்பு, வழக்கம்போலச், சிறப்பாக வெளிவந்துள்ளது. திருவள்ளுவர் பெருந்தகையார் அருளிய பெறற்கரிய பெருஞ் செல்வத்தால் பயன்பெற விரும்பும் அன்பர்க்கு இது பேருதவியா யிருக்கும். இவ்வுதவியை ஆண்டுதொறும் ஆற்றி வரும் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் தொண்டு பெரிதும் பாராட்டத்தக்கது. தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இந்தக் குறிப்பு இருக்கவேண்டியது இன்றியமையாதது.

# நீரரமகவிர் இன்னிசைப் பாடல்

உயர்திரு. சுவாமி விபுலாநந்தர், மாயாவதி, அல்மோரா, இமாலயம்.

ஈழ மண்டலம் என வழங்கும் இலங்கைத் தீவானது, முன்னாளிலே, இரத்தினத்தீவம், மணிபல்லவம் என இருவேறு பிரிவாய் இலங்கியது. மணிபல்லவம், பின்னாளிலே மணற்றி எனவும் யாழ்ப்பாணம் எனவும் ஆயிற்று.

*அந்தரம் ஆரு ஆறைந்து யோசனைத்*
*தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த*
*மணிபல்லவம்* —மணிமேகலை-சு.

என்றமையின், காவிரிப் பூம்பட்டினத்துக்கு முப்பது யோசனை தெற்கே மணிபல்லவம் அமைந்திருந்த தென்பதும்,

*ஈங்கிதன் அயலகத்து இரத்தின தீவத்து*
*ஓங்குயர் சமந்தத்து உச்சி மீமிசை*
*அறவியங் கிழவோன் அடியிணை யாகிய*
*பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்*
*அறவி நாவாய் ஆங்குளது* —மணிமேகலை-கக.

என்றமையின் மணிபல்லவத்திற்கு அயலிடத்தது இரத்தின தீவம் என்பதும், இதனிடத்துள்ள சமந்தம், சமந்தகூடம் எனப்படும் மலையினது உச்சியிலே, புத்ததேவரது திருவடி பொருந்தியுளது என்பதும்,

*இலங்கா தீவத்துச் சமனொளி யென்னும்*
*சிலம்பினை யெய்தி வலங்கொண்டு* —மணிமேகலை-உஅ.

என்றமையின் இரத்தினதீவம், இலங்காதீவம் எனவும் வழங்கப்பட்ட தென்பதும், சமந்தகூடத்திற்குச் சமனொளி யென்னும் பெயர் உளதென்பதும் பெறப்பட்டன.

சமனொளி மலையி லிருந்து உற்பத்தி யாகிக் குண கடலொடு கலக்கும் மாவலிகங்கை யென்னும் நதி யொன்று உளது. திருக்

கரைசைப் புராணம், திருக்கோணசல புராணம் முதலிய நூல்கள் இந்நதியினை மாவலிப் பெயரோடு சார்த்தி வழங்குவன. சிங்கள மொழியிலே இந்நதி பெருமணல் ஆறு, மஹா வேலி கங்கா, எனப்படும், மாவலி கங்கைச் சங்கமத்திற்கு வடக்கே திருக் கோணமலையும், தெற்கே மட்டக்களப்பும் அமைந்துள்ளன. இவை யிரண்டினையும் ஒருங்குசேர்த்துக் கிழக்கு மாகாணம் என வழங்குவர். மட்டக்களப்பிலே முப்பது மைல் நீண்ட வாவி ஒன்று உளது. இது கடலொடு கலக்கும் வடகோடி அமிர்தகழி யென்னும் புண்ணியப் பழம்பதிக்கு அணிமையானது. அழகிய தெற்குக் கோடிக்கு அணிமையாக, மேற்குக் கரையிலே மண்டூரென்னும் புண்ணியப் பழம்பதி யுளது. வாவியின் மேற்குக் கரை முழுவதும் மருதத் தண்பணை யாகும்; கிழக்குக் கரையிலுள்ள ஊர்கள், தெங்கு, மா, பலா முதலிய மரங்கள் செறிந்து, கண்ணுக்கும் மனத்துக்கும் உவகை தருவன. புலியன் எனப் பெயரிய திமிலர் குலத் தலைவன் அரசு புரிந்த விடமாதலின், முன்னளிலே, புலியன் தீவு என வழங்கப்பட்டதும், இந் நாளிலே, மொழிச்சிதைவினலே, புளியந் தீவு என வழங்கப் படுவதும், மூன்று மைல் சுற்றளவுடையது மாகிய அழகிய நகரம் ஒன்று, காவிரி நடுவண் அமைந்த திருவரங்கம் போல, மட்டக் களப்பு வாவியின் நடுவண் அமைந்துள்ளது. இந்நகர் மட்டக் களப்புப் பிரிவிற்குத் தலைநக ராகும். ஒல்லாந்தர் (Hollanders: Dutch) கட்டிய கோட்டை யொன்று வாவிக் கரையில் உள்ளது. கோட்டைக்கு எதிர்ப்புறமாகக் கல்லடி யென்னும் ஊர். வாவியினுள்ளே நீர்மட்டத்தின்மேற் பத்தடி வரையி லுயர்ந்த பாறை யொன்று உளதாதலின், இவ்வூர் இப்பெயர் பெற்றது. இள வேனிற் காலத்திலே, நிறைமதி நாளாகிய பூரணை நாளிலும், அதற்கு முன்னும் பின்னு முள்ள நாட்களிலும், வானம் களங்க மற்றிருக்கும் வேளையிலே, யாமப் பொழுதிலே, புளியந் தீவுக் கோட்டைக்கும் கல்லடிக்கு மிடையிலே, சிறு தோணியினைச் செலுத்திச் சென்று, வாவி நடுவிலே, ஆர்ப்பரவமின்றி, அமைதி நிலையி லிருந்து உற்றுக்கேட்டால், நீரினுள் ளிருந் தெழுகின்ற அற்புதமாகிய இன்னிசை யொலி, செவிவழிப் புகுந்து, உள் ளத்தை யுருக்கும். இத்தகைய அற்புத இசையொலியானது

வட அமெரிக்கா நாட்டின் மேற்றிசையிலுள்ள கலிபோர்ணியா (California) நாட்டிலும், மட்டக்களப்பு நாட்டினுமன்றிப், பிறிதெவ்விடத்திலும் கேட்கப்பட்டிலது என அறிஞர் கூறுவர். இலங்கைக்கு வரும் மேனாட்டார், இவ்விசையைச் செவிமடுப்பதற்காக, மட்டக்களப்பிற்கு வருவதுண்டு. இவ்விசை நீரினுள் இருந்து எழுவதாதலின், நீர்வாழ் செந்தின் ஒலியாதல் வேண்டுமென எண்ணிப் போலும், அந்நிய நாட்டார் இதனைப் பாடும் மீன் (Singing fish) இசை யென்பார். மீன்கள் நீரினுட் குதித்து ஆடுதலைக் கண்டோமே யன்றி, அவை மகிழ்ச்சியாற் பாடுதலை யாண்டுங் கேட்டிலமாதலின், அந்நிய நாட்டாரது உரையினை யாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். கலை வல்லார் காணாத உண்மைகள் சில கவிஞரது உள்ளத்து உதிப்பவாதலின், இவ்வற்புதக் கீதவொலியைக் குறித்துத் தமிழ்ப் புலவர் ஒருவர் எழுதிய செய்யுள் ஒன்றினை ஈண்டுத் தருகின்றாம். அறிஞர் உவந்தேற்று அருள் புரிவாராக. கவிஞர்க்கு இயல்பாக அமைந்த புனைந்துரை எனக் கொள்ளினும் இழுக்காகாது.

தண்ணளிசெங் கோலாய்த் தனியறமே சக்கரமாய்
மண்முழுதும் ஆண்டபுகழ் வாமன் அடியிணையே
என்றும் அழியா திலங்குஞ் சமனொளியும்
கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவற்கு
மூவடிமண் ஈந்தளித்து மூவாப் புகழ்படைத்த
மாவலியின் பேரால் வயங்கு மணிநதியும்
காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரால் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங் கன்னலொடு
தெங்கின் இளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
எங்குங் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக் களப்பென்னும் மாநாடங் நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்ததோ ணாமுகமாய்
ஐங்கரன் கோயில் அமிர்த கழிக்கணித்தாய்ப்
பொங்கு கடலுட் புகும்நீர் நிலையொன்று

நீர்நிலையி னுள்ளே நிகழ்ந்த அதிசயத்தைப்
பாரறியக் கூறும் பனுவ லிதுவாகும் :

மாசகன்ற மணிவிசும்பில் வயங்குநிறை மதியம்
மலர்க்கிரண ஒளிபரப்ப வளருமிள வேனில்
வீசுதென்ற லொடுங்கூடி விளையாடல் கண்டு
விண்ணகத்தார் மண்ணகத்தில் விழைவுகொளும் யாமம்.

அஞ்சிறைய புள்ளொலியும் ஆன்கன்றின் கழுத்தில்
அணிமணியின் இன்னொலியும் அடங்கியபின் நகரார்
பஞ்சிலையந்த அணைசேரும் இடையாமப் பொழுதிற்
பாணனொடுந் தோணிமிசைப் படர்ந்தனனோர் புலவன்.

தேனிலவு மலர்ப்பொழிலிற் சிறைவண்டு துயிலச்
செழுந்தரங்கத் தீம்புனலுள் நந்தினங்கள் துயில
மீனலவன் செலவின்றி வெண்ணிலவிற் றுயில
விளங்குமட்டு நீர்நிலையுள் எழுந்ததொரு நாதம்.

| | |
|---|---|
| நீநி—சாச—ரீ, | நீல வானி லே |
| நிசரி—காக—மா, | நிலவு வீச வே |
| மாம—பாப—தா, | மாலை வேளை யே |
| மபத—நீநி—சா, | மலைவு தீரு வோம் |
| சாச—ரீரி—கா, | சால நாடி யே |
| சரிக—மாம—பா, | சலதி நீரு ளே |
| பாப—தாத—நீ, | பாலை பாடி யே |
| பதநி—சாச—ரீ, | பலரொ டாடு வோம். |

நீல வானி லே நிலவு வீச வே
மாலை வேளை யே மலைவு தீரு வோம்
சால நாடி யே சலதி நீரு ளே
பாலை பாடி யே பலரொ டாடு வோம்.

நிலவு வீச வே மலைவு தீரு வோம்
சலதி நீரு ளே பலரொ டாடு வோம்.

நிசரி காக மா மபத நீநி சா
நிலவு வீச வே மலைவு தீரு வோம்

சரிக மாம பா பதநி சாச ரீ
சலதி நீரு ளே பலரொ டாடு வோம்

ரிகம பாப தா தநிச ரீரி கா
கமப தாத நீ நிசரி காக மா

என்ன எழுந்தஅந்த இன்னிசைத்தீம் பாடலினைக்
கன்ன லெனக்கேட்டுக் களித்த புலவனுந்தன்
அன்பன் முகநோக்கி ஆகாஇவ் வற்புதத்தை
என்னென் றுரைப்பேன் இசைநூற் பொருளுணர்ந்தேன்
ஐந்தாம் நரம்பின் அமைதியினை யானறிந்தேன்
காந்தாரத் தைந்தாய்க் கனிந்த நிஷாதமெழும்
செய்ய நிஷாதச் செழுஞ்சுரத்தின் பஞ்சமமே
வையம் புகழுகின்ற மத்திமமாம் மத்திமத்திற்(கு)
அஞ்சாஞ் சுரமாம் அணிசட்ஜம் சட்ஜத்தின்
பஞ்சமமே பஞ்சமாம் பன்னும் ரிஷபமதற்(கு)
அஞ்சாஞ் சுரமாய் அடையும் அணிரிஷபத்(து)
எஞ்சாத பஞ்சமமாய் எய்திநிற்குந் தைவதமே
தைவதத்திற் கைந்தாய்த் தனித்தகாந் தாரம்எழும்
இவ்வகையே ஏழாகி இன்னிசையாழ் தீங்குழலில்
நாதமாய்த் தோன்றி நவைதீர் அமிழ்தனைய
கீதமாய் மேவும் கிளையாய்ப் பகைநட்பாய்
நின்ற முறையை நினையின் இவைகிளையாம்
என்ற பொழுதில் எழுவர் மடநல்லார்
நீரு ளிருந்தெழுந்து நின்றார் அரமகளிர்
ஆதலினல் மூப்பறியார் அந்தீங் குழலொலியும்
ஓதிய யாழின் ஒலியு மெனமொழிவார்
பைம்புனலின் மேற்படர்ந்த பாசிநிகர் கூந்தலார்
அம்பொன்னின் மேனி அரையின்கீழ் மீன்வடிவம்
செங்கமலம் போற்கரங்கள் திங்கள் மதிமுகத்திற்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்
கவிமுகத்தை நோக்கிக் கனிந்துரைப்பார் யாங்கிளையே
புவியிலெனைத் தாரமென்பார் புதல்வியிவள் பேர்உழையே
உழையின் மகள்குரற்பே ருற்றாள் இளிதநயை
பிழையில் இளிபாற் பிறந்தாள்பேர் துத்தமே
துத்தம் பயந்த சுதைவிளரிப் பேர்பூண்டாள்
உய்த்த விளரிக் குறுதநயை கைக்கிளையே

பொன்னின் கபாட புரத்துறைவோம் மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்
ஆடுவோம் பாடுவோம் ஆராத காதலினால்
வாடுவோம் பின்னர் மகிழ்வோம் நகைபுரிவோம்
அச்ச முறுவோம் அடையாதார் தங்களையாம்
இச்சை யறவே இழித்துரைக்கும் நீர்மையேம்
உருத்தெழுந்து கோபிப்போம் உண்மை யுரைப்போம்
அருத்தியொடு வீர மறைவோம் வியப்புறுவோம்
திங்கள் நிறைநாளிற் சேர்வோமிந் நீர்நிலையைக்
கங்குல் கழியுமுன்னே கார்படிந்த மைக்கடலைச்
சென்றுயாஞ் சேர்வோமெஞ் செய்கை யிதுவென்றார்
ஒன்றாக நீருள் ஒழித்தார் தமிழ்ப்புலவன்
சிந்தையை யன்னார்பாற் சேர்த்தி மனைபுகுந்தான்
வந்த இசையின் வரன்முறையும் ஈங்கிதுவே.

குறிப்பு :—கபாடபுரம் இடைச் சங்கத் திறுதியிலே கடலுள் அமிழ்ந்தது. தாரம்=காந்தாரம், உழை=நிஷாதம், குரல்=மத்திமம், இளி=சட்ஜம், துத்தம்=பஞ்சமம், விளரி=ரிஷபம், கைக்கிளை=தைவதம் என அறிக. நவரசமும் இசைக்குரிய என்னும் உண்மை, 'ஆடுவோம் பாடுவோம்' என்பது முதல் 'வியப்புறுவோம்' என்பது வரையும் கூறப்பட்டது.

# சிலப்பதிகாரமும் கிரேக்க நாடக வியலும்

திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ.,
வரலாற்றாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழ் மொழியின் எழிலும், ஏற்றமும், வன்மையும், வளமும் கவினுற விளங்க யாக்கப் பெற்ற சிலப்பதிகாரம், நந்தமிழ் இலக்கியச் செல்வத்துள் செல்வமாய்ப் போற்றப் பெற்று வருகிறது. இசை, இயல், நாடகம் எனப்படும் முத்திறத் தமிழுக்கு எத்திறத்தாலும் உயரிய வந்நூலை எடுத்துக் காட்டுதல் மரபு. அத்தகைய சிலப்பதிகாரத்தின் நாடக இயல்புகளை மட்டும் ஆராய்தற் பொருட்டு இக்கட்டுரை எழுந்ததாகும்.

பற்பல காலங்களிலோ, வேறு பட்ட மொழிகளிலோ, இயற்றப் பெற்றிருப்பினும், உலகத்தார் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத் தகும் இலக்கியங்க ளெல்லாம், மனிதனின் அடிப் படையான பண்புகளையே உள்ளுறையாகக் கொண்டு எழுவன வாம். வெப்ப தட்ப நிலையாலும், பழக்க வழக்கங்களாலும், நிறம் மொழிகளாலும், வேற்றுமை மிக்குடையராய் மக்கள் தோன்றினும், அவரை யெல்லாம் ஒன்று படுத்துவன, அவ் வேற்றுமைகளைக் கடந்து நிற்கும் பொதுப் படையான இயல்பு களே யாம். அத்தகைய பொது வியல்புகளை அடிப்படை யாகக் கொண்டு தம் நூல்களை இயற்றினதா லன்றோ, ஹோமர், சகப்பிரியர், கீட்டே முதலியோர் உலகத்தவர் யாவராலும் போற்றப்படுகின்றனர். அங்ஙனம் பொது நோக்கோடு எழுந்த கிரேக்க இலக்கியங்களைக் கொண்டு வகுக்கப்பெற்ற அரிஸ்டாட் டலின் "செய்யுளியல்", தமிழிலக்கியமான சிலப்பதிகாரத்துக் கும் பொருத்த முடையதாய் இருத்தலில் வியப்பொன்று மில்லையே. சிலப்பதிகாரம் உலக இலக்கிய மன்றோ?

இனி, கிரேக்க நாடக இயலைச் சொல்லி, அஃதெங்ஙனம் சிலப்பதிகாரத்தோடு ஒன்றுகிற தென்பதையும் எடுத்துக்காட்டு

வாம். முதலில் அவலக் கூத்தை யாக்குவோர் எத்தகைய நடையைக் கையாள வேண்டுமென்பதைப் பற்றி அச்செய்யுளிய லாசிரியர் கூறுகின்றார். மொழி நடை இனிதாகவும், ஓசை நயம் வாய்ந்ததாகவும், சந்தமுடையதாகவும் இருத்தல் வேண்டு மெனவும், இடை யிடையே பாடல்களும் நிறைந்திருத்தல் வேண்டுமெனவும் அவர் கூறு நிற்பர். இளங்கோவடிகள் சிலப் பதிகாரத்தில் கையாண்டுள்ள நடையை, அடியார்க்கு நல்லா ரும், பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யு ளெனக் கூறிப் போந்தார். அழகிய இன்னிசைப் பாட்டுகள் கானல்வரி, ஆய்ச்சி யர் குரவை முதலிய பகுதிகளில் மண்டிக் கிடப்பதை அந் நூலைப் படிப்போர் யாவரும் நன்கறிவர். மேலும் நடையை அவலக் கூத்தின் அறுவகைச் சிறந்த இயல்புகளில் ஒன்றாக அவ் வாசிரியர் பேசுகிறார். நடை உவமை மலிந்ததாகக் காணப்பட வேண்டுமெனக் கூறிப், பின்னும் கூறுகிறார்: 'உவமை களைத் திறனுடன் கையாளுதல் பெருமையைப் பயப்ப தாகும். அதைப் பிறரிடம் இருந்து கற்றல் என்பது இயலா தாம். நூலாசிரியனின் அறிவின் உயர்வை அளக்கும் கோலா கும் உவமை. நல்ல உவமையைக் கையாள்பவன் வேற்றுமை யிலும் ஒற்றுமையைக் காண்பவனுவான்.'* என்பர். இவ்வகை யில் இளங்கோவடிகளின் கைத்திறம் கீழ்வரும் ஒருவமையினு லேயே நன்கு அறியப்படும்.

விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போல

என அவர் வேங்கடத்தில் நின்று காட்சியளிக்கும் திருமாலைச் சித்தரித்துள்ளார். திருமாலின் வெண் சங்கும் பொற் றிகிரியும், திங்களையும் ஞாயிற்றையும்; அவன் இடையில் உடுத்திருக்கும் பொன்னுடை, மின்னலையும்; அவன் கை வில், பன்னிற வான வில்லையும்; அவன் உருவம், நீலமேகத்தையும் குறிப்பன வாம். இக் காட்சிகளெல்லாம் ஒருங்கே வானத்தில் காணக்

* 'The Poetics'—By-water's translation, p. 71.

கூடியதன் றெனினும், புலவனின் உளத்தில் திருமாலின் உருவம் அவற்றை யெல்லாம் ஒருங்கே நினைப்பூட்டியது. வேற்றுமையில் ஒற்றுமையைக் காணல், புலவனுவானின் சிறந்த இயல்பு என மேலே குறிப்பிடப்பெற்றது. அதற்கெடுத்துக் காட்டாகக் கீழ்வரும் வரிகளைக் காட்டலாம்.

> அங்கண் உலகில் அருந்ததி யன்னுளை
> மங்கல நல்லமளி யேற்றினர், தங்கிய
> ..................................................
> செருமிகு சினவேற் செம்பியன்
> ஒருதனி யாழி உருட்டுவோன் எனவே.

என்னும் இவ்வரிகளில், கண்ணகியின் கையைக் கோவலன் பிடித்ததற்கும், செம்பியனின் ஆட்சி சிறப்பதற்கும் உள்ள தொடர்பு வெளிப்படையாகக் குறிப்பிடப்படாமையால், அவை இரண்டும் தம்முள் வேறுபட்ட செயலாகத் தோன்றுகின்றன. எனினும், கண்ணகி போன்ற மங்கையரின் கற்பு சிறப்பதாலேயே மன்னனுவானின் கொற்றமும் சிறக்கும் என்னும் கருத்தை அவ்வரிகள் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றனவாம்.

ஒவ்வொரு அவலக் கூத்திலும் ஆறு உறுபுகளுளவாம். அவை, கதை, நாடக பாத்திரங்கள், நடை, கருத்துகள், காட்சி, இசை என்பனவாம். இவ் வாறுவகையான உறுபுகளில், நடையைப் பற்றி நாம் முன்பே கூறியுளோம். இனிக், கதையைப் பற்றி அரிஸ்டாட்டில் என்ன கூறுகிறார் என நோக்குவாம். 'இவ்வாறில் சிறந்தது' நிகழ்ச்சிகளின் தொகுதியோ, கதையோ எனலாம். அவலக் கூத்தென்பது மக்களைப் பார்த்து நடிப்பதன்று. மக்கள் வாழ்க்கையில் தோன்றும் நிகழ்ச்சியையும், இன்ப துன்பச் செயல்களையும் நடிப்பதாகும். எனவே, எல்லாவற்றிலும் சிறந்தது, அவலக் கூத்திற்கே உயிரும் உணர்வும் எனப்படுவது, கதையே என நாம் நிலைநாட்டுகின்றோம்.'* என்பது. கதையின் அளவைப் பற்றிப் பேசுகையில், கதைக்குத் தலைவனுவான், இன்ப வாழ்க்கையினின்றும் மாறித், துன்பம்

* 'The Poetics'—Bywater's translation, P. P. 19 and 21.

எய்துதற்கு இடையில் சில நிலைகளையுடையதற்கு ஏற்ற அளவில் அமைந்திருத்தல் வேண்டும் என்பர். கதையின் தலைவனாய் இருப்பவன், கொஞ்சமும் குறைபா டில்லானாய், தூய்மை யுடையனாய்ச் சித்தரிக்கப்படின், அவனுடைய வீழ்ச்சிக்கு ஏற்ற காரணம் படிப்போர் உளத்தில் தோன்றுதல் கடினமாம். அத்தகையோன் துன்புறுதலைக் கண்டோ, கேட்டோ, சாதாரண மனிதன் உளத்தில் உணர்ச்சி தோன்றுத லரிதாம். எவ்வாற்றானும் குற்றத்துக்குக் கொள்கலனாக விருப்பான் கதையின் தலைவனானால், அவனடையும் துன்பத்தைக் கண்டு இரக்கமோ, வேறு உணர்ச்சியோ தோன்றாதன்றோ. ஆகையால், இவ்விரண்டு நிலைக்கும் இடைப்பட்ட நிலையி லுள்ளவனாய்த் தலைவ னிருப்பின், அவனுடைய வீழ்ச்சி, தன் குற்றத்தால் விளையாது, பிழையால் விளைந்திருப்பின், அத்தகையானின் துன்பம் மக்கள் உளத்தில் இரக்க மென்னும் உணர்ச்சியை விளைவிக்கும். அவலக் கூத்தின் நோக்கமே, அதைப் படிப்பார் உளத்தில் நல்லுணர்ச்சியைத் தோற்றுவித்து, அவரைத் தூயராகச் செய்தலே யாம்.

சிலப்பதிகாரக் கதையும், கோவலன் கண்ணகி என்பாரின் நிலையில் மாறுதல் உண்டாதற் கேற்ற அளவினதாய் அமைந்துளது. அதில் காணப்படும் நிகழ்ச்சிகள் சிலவே யாகும். கோவலன், கண்ணகியை மணந்து, சில வாண்டுகள் இல்லறம் நடத்துகின்றான். பின் மாதவியின் ஆடல், பாடல், அழகில் ஈடுபட்டுத் தன் இல்லக்கிழத்தியை மறந்து, மாதவிபால் சென்று, இன்பம் துய்க்கின்றான். சில காலம் சென்று, கடற்கரையில் இனிமையாய் யாழ் வாசிக்கத் தொடங்கி, மனம் வேறுபட்டுப், பிரிகின்றனர். பிரிந்த கோவலன், கண்ணகியை அடைந்து, அவளொடும் மதுரை செல்கின்றான். அவன் கள்வ னெனக் குற்றம் சாற்றப்பெற்று, கொலைக்களப் படுகின்றான். கண்ணகி பாண்டியன்பால் சென்று வழக்குரைக்க, தன் பழி நாணி, பாண்டியனும், அவன்தன் கோப்பெருந்தேவியும் உயிர் துறக்கின்றனர். மதுரை எரிக் கிரையாகின்றது. கண்ணகி, தனித்து மலைநாடு சென்று, பட்டினி கிடந்து, உயிர் துறக்கின்றனள். இக் கதையின் அமைப்பு, கிரேக்க நாடகங்களின் கதையமைப்பைப்

போல் எளிமை யுடையதாகக் காணப்படுகின்றது. இக்கதையை, சோபாக்கிளீஸ் என்னும் கிரேக்க நாடகாசிரியன், கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் எழுதிய, 'ஆண்டிகொனி' என்னும் அவலக் கூத்திற்கு ஒப்பிடலாம். கதையின் தலைவனான கோவலனும், அரிஸ்டாட்டில் கூறிய இலக்கணத்துக்குப் பொருத்த முடையவனாகவே காணப்படுகிறான். இளமை, அழகு, அறிவு, செல்வம் எல்லாம் வாய்க்கப் பெற்றிருப்பினும், காமுகனாய் இருக்கின்றான். காரணமின்றி மாதவிபால் ஐயங்கொண்டு பிரிகின்றான். பிரிந்தவன் கண்ணகியோடு கூடியிராமல், உள வெழுச்சி உந்த, மதுரை யேகுகின்றனன். அத்தகைய நற் பண்புகள் மிகவாகவும், குற்றங்கள் குறைவாகவும் உடைய தலைவன், கள்வனெனக் குற்றம் சாற்றப்பெற்றுக் கொலைக்களப் படும்போது, படிப்போர் உளத்தில் பேரிரக்கம் குடிகொள் கின்றது.

கதையைப் பற்றி எழுதுங்கால், வேறொரு சிறந்த உறுப் பையும் அக்கதை யுடையதாய் இருத்தல் வேண்டுமென அக் கிரேக்க அறிஞன் கூறுகின்றான். அதற்கு கிரீக் மொழியில் Peripety எனப் பெயர். அதாவது, கதைப் போக்கைத் திடீரென மாற்றக் கூடிய செயலாம். அச்செயலால் தலைவனின் நிலை இன்பத்தினின்றும் துன்பத்திற்கு மாறுதல் வேண்டும். அத்தகைய மாறுதலே கதையின் அவல முடிவை விளைவிப்ப தாகும். சிலப்பதிகாரத்தின் இவ்வியல்பு, கிரேக்க நாடகங்களி லும் சிறந்து விளங்குகின்றது. இவ்விலக்கணத்துக்கு எடுத்துக் காட்டாக நாம் இவண் கானல் வரியையே குறிப்பிடலாம். காவிரிப்பூம் பட்டினத்தில் மக்கள் எல்லோரும் விழாக் கொண் டாடி, தீது தீரக் கடலில் படிந்து, மாசு தீரப் புனல் படிந்து, ஆடல் கண்டு, பாடல் கேட்டு, இன்ப வயமாய்க் காலங் கழிக் கின்றனர். அத்தகைய நிலையிலேயே இருந்த கோவலனும், மாதவியும், மாலை வேளையில், கடலின் தண்ணிய காற்றைத் துய்த்து, நிலவெனும் மணற் குன்றில் அமர்ந்து, திருத்திய யாழை ஏந்தி, ஒருவர் பின் ஒருவராய், வார்ந்து, வடித்து, உந்தி, உறழ்ந்து, உருட்டித், தெருட்டித், தம் பாடலோடு இயைய

வாசிக்கின்றனர். யாழோ 'மணமகளிர் கோலம் போல் வனப் பெய்தி', 'குற்ற நீங்கிய' சிறப்பினதாய் இருப்பதால், அதை வாசிப்போருக்கு அது யாதொரு கேடும் விளைவிக்கக் கூடிய தன்று. யாழ் ஒலியில் ஈடுபட்டார் இன்பமன்றி துன்பத்தை எண்ணலும் இல்லையாம். கோவலனும் மாதவியும் மாசற்ற காதலையுடையவர். இத்தகைய தூய இன்பம் எங்கணும் குடி கொண்டிருக்கும் வேளையில், கோவலன் மாதவியை வெறுத்துப் பிரிகின்றான். அப்பிரிவுக்குக் காரணம் மாதவியின் குற்றமன்று. இளங்கோவடிகள், 'யாழிசைமேல் வைத்து ஊழ்வினை வந் துருத்த தாதலின்' பிரிந்தார் என்றார். பிரிவுக்குக் காரணம் உண்மையாகக் கோவலன் மாதவியின் உளத்தைச் சரிவர அறி யாததே யாம். அதை அரிஸ்டாட்டில், 'error of judgment' என்கின்றார். அவ்வூடலும், அதனால் விளைந்த பிரிவுமே, கோவ லனைக் கொலை யுண்ணச் செய்தது. அப்பிரிவின் பயன் அத் துடன் நிற்கவு மில்லை.

மாதவி மடந்தைதன் கானற் பாணி
கனக விசயர்தம் முடித்தலை நெறித்தது

என்றார் இளங்கோவடிகளும். இவ்வரிகளே சிலப்பதிகாரத்தின் உயிர் நிலையாகும் எனில், மிகையாகாது.

கதைக் கிரண்டாவதாக, நாடக பாத்திரங்களைச் சித்தரித் தலைப்பற்றி அரிஸ்டாட்டில் பேசுகின்றான். இக்கால மேனாட்டு நாடகங்களில், நாடக பாத்திரங்களுக்கு முதலிடம் அளித்திருக் கின்றனர். இதைப்பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துகள், அவன் காலத்திய கிரேக்க பொது மக்களின் நிலையை ஒட்டியே அமைந் திருக்கின்றன. 'நாடக பாத்திரங்களெல்லாம் நன்னடத்தை யுடையராய் இருத்தல் வேண்டும். பெண்கள் ஆடவருக்கு அறிவில் குறைந்தவரா யிருப்பினும், அடிமைகள் பயனற்ற பொருள்களா யிருப்பினும், அவர்கள்கூட நல்லியல்பு வாய்ந்தவர் களாய் சித்தரிக்கப் பெறவேண்டும்.'* என அவன் கூறுகின் றான். தமிழகத்தில் அக்காலத்தில் பெண்கள் எவ்வாற்றானும் ஆடவருக்குத் தாழ்ந்தவர் எனக் கருதப்படாததாலும்,

* 'The Poetics'—Bywater's translation, p. 43.

அடிமைத்தனம் அக்காலத்தில் இல்லாததாலும், மக்களெல்லோரும் நல்லியல்புகள் வாய்ந்தவர்களாகவே இருந்தனர். ஆகையால், இளங்கோவடிகளும், பொற்கொல்லனைத் தவிர மற்றோருமே நற்பண்புகள் வாய்ந்தோராகவே சித்தரித்துளார். கோவலனின் கருணைமறமும், கண்ணகியின் நிறையும், மாதவியின் கற்பும், கவுந்தியடிகளின் தூய்மையும், மாதரியின் செய்ந்நன்றியும், பாண்டியனின் நெறியும் நன்கு விளக்கப் பெற்றிருக்கின்றன. பொற்கொல்லனும் நுண்ணிய அறிவுடையோனுய்க் காணப்படுகிருன்.

நாடக பாத்திரங்கள் தத்தம் நிலைக்கும் தன்மைக்கும் ஏற்ற வண்ணம் நடிக்கவேண்டுமெனவும், பெண்கள் நுண்மாண் நுழைபுலம் உண்டயராகவோ, வீரம் உடையராகவோ இருக்கலாகாதெனவும் அக் கிரேக்க அறிஞன் கூறுவன். அங்ஙனம் வீரமும், அறிவு நுட்பமும் ஆடவருக்கே உரியவென அக்காலத் தமிழர் எண்ணவில்லை யாதலால், கண்ணகி நல்லறிவுடையாளாகவும், வீரமுடையாளாகவும் காணப்படுகிருள். தன் பார்ப்பனத் தோழி தேவந்தி, சூரிய சோம குண்டங்களில் மூழ்கினுல், கண்ணகி கணவனைப்பெறலாம் எனக்கூற, அத்தகைய செயல் 'பீடன்று' எனக் கண்ணகி கூறியது, அவளுடைய உயர்ந்த உளத்தைக் குறிப்பதாகும். பாண்டியனேடு வழக்குரைத்த திறத்தை நோக்கின், அக்கற்பரசியின் அறிவின் மாட்சி புலப்படும். ஆகையால், கண்ணகியை, அறிவு நுட்பமும், வீரமும் வாய்ந்தவளாக இளங்கோவடிகள் காட்டியிருத்தலில், அவர் அரிஸ்டாட்டிலின் இலக்கணத்தை மீறினு ராயினும், தமிழகத்தின் மரபுக்கேற்ற வண்ணமே செய்துளார். அரிஸ்டாட்டில், நாடகத்தில் பெண்கள் வீரமுள்ளாராய்த் தோன்றக் கூடாதென எழுதியிருப்பினும், சோபாக்கிளீஸ் எழுதிய 'ஆண்டிகொனி' என்னும் அவலக்கூத்தில், அக்கதையின் தலைவி வீரமுள்ளவளாகவே சித்தரிக்கப்பட்டுளாள். தன் அண்ணன் நாட்டுக்குக் கெடுதி விளைவித்தான் என்னும் குற்றம் சாற்றப்பெற்று, அரச ஆணையால் கொலைசெய்யப்பெற்ருன். அவ்வரச ஆணையினுலேயே, அவன் உடல் கழுகுக்கும் நாய்க்கும் உணவாக ஊர்ப்

புறத்தில் இடப்பெற்றது. அவ்வுடலைப் புதைப்போர் தம் முயிரை இழப்பர் என்னும் ஆணையும் பிறப்பிக்கப்பெற்றது. ஆண்டிகொனி, தன் னண்ணன் குற்றவாளி என்பதையும், அவனுக்கு விதித்த தண்டனை பொருத்த முடைய தென்பதையும் ஏற்றுக்கொள்கிருள். ஆனுல், அவனை முறைப்படி புதைக்க வேண்டுவது தங்கையாகிய அவளுடைய கடன் என்பதை உணர்கின்ருள். உடனே அரச ஆணையை மீறித், தன் னண்ணனின் உடலைப் புதைக்கின்ருள். அக்குற்றத்திற்காக உயிரை இழக்கவேண்டுமெனத் தெரிந்தும், வீரத்தோடு தன்னுடைய கடமையை ஆற்றி, உயிர் துறக்கின்றனள். அவளுடைய வரலாற்றிற்கும் கண்ணகியின் வரலாற்றிற்கும் பெரிதும் ஒற்றுமை இருப்பது யாவர்க்கும் புலனுகா திராது. குற்ற மற்றவனுய் இருந்தும், தன் கணவன் அரச ஆணையால் கொல்லப் பெற்ருன். கண்ணகி உடன் உயிர் நீங்கவேண்டியவள். எனினும், தன் கணவன் கள்வ னல்லன் என நிலைநாட்டி, அவன் நிந்தையைப் போக்கி, உலகில் அவன் புகழை நிலைநிறுத்த வேண்டிய கடமை அவளதாயிற்று. உடனே பாண்டியன் முறை பிறழ்ந்ததை வீரத்தோடு எடுத்துக்காட்டுகின்ருள். தன் கடமையைச் செய்து வெற்றி பெற்ருள் கண்ணகி. பின்னர் அவள் வீரம் தளர்ந்தது. மலைநாடு சென்று உயிர் நீங்கினள். கண்ணகியும் ஆண்டிகொனியும் தத்தம் கடமையைச் செய்யவேண்டும் என்னும் உணர்ச்சி மேம்பாட்டால் வீரமுடையோராய் நடந்து கொண்டனர்.

இனி, கிரேக்க நாடகங்களில், ஊழ் பல செயல்களுக்குக் காரணமாய்க் கையாளப்பட்டுளது. எனினும், மனிதனின் செயலையே அவர் முன்னணியில் வைத்துப் பேசுகின்றனர். சோபாக்கிளீஸ் இயற்றிய 'எடிப்பஸ்' என்னும் நாடகத்தில், ஊழின் வலி மிகவாகக் காணப்படுகிறது. இளங்கோவடிகளும், கோவலன் கண்ணகி ஆகியோரின் அவல முடிவுக்கு, அவர் தம் ஊழ்தான் காரணம் என்பதைத் தெளிவாய்ப் பல விடங்களில் காட்டியுளார்.

இக்கட்டுரையால், சிலப்பதிகாரத்தின் பெருமை நன்கு விளங்கும். கி. மு. நான்காம் நூற்ருண்டில் கிரேக்க நாட்டிலுள்ள

ஓரறிஞனால் எழுதப்பட்ட நாடக இயல், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் எழுதப்பெற்ற சிலப்பதிகாரத்துக்கு எவ்வாற்றானும் இலக்கணமாய் அமைந்துளது. இதனால், உண்மையாக நுண்மாண் நுழை புலன் வாய்ந்த புலவனால் யாக்கப்பெறும் நூல், காலம், இடம் என்னும் கட்டுப்பாடுகளையும் கடந்து நின்று மிளிரும் என்பது புலப்படும். தமிழரின் தவப் பயனாய்க் கிடைத்த இச்சீரிய நூலைத் தமிழர் பெரிதும் போற்றுதிருத்தல் அவமன்றோ?

# சங்க காலத்து அங்கதம்

திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்
திருச்சிராப்பள்ளி வானொலியிற் பேசியது

ஆங்கிலமொழியில் Satire (செடயர்) என்பது தமிழில் **அங்கதம்** என்று வழங்கப்படும். தமிழிற் காலத்தால் முற்பட்ட தொல்காப்பியமென்னும் இலக்கண நூலில், இவ்வங்கதம்பற்றி வந்த செய்யுளின் இலக்கணமும், வகையும் இன்னவென, 'வசையொடு நகையொடும் புணர்ந்தன் றாயின், அங்கதச் செய்யு ளென்மனார் புலவர்', 'அங்கதந் தானே யரில்தபத் தெரியின், செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே', 'மொழிகரந்து சொல்லினது பழிகரப்பாகும்' என்னும் இவை முதலிய சூத்திரங்களால் தெளிய வுரைக்கப்பட்டன. ஒருவனுடைய குறையையோ, ஒரு சமுகத்தாரின் குறையையோ, அன்னார் நெஞ்சில் உறுத்தும் வண்ணம், வெளிப்படையாகவும், குறிப்பாகவும் கூறுதல் அங்கதமாகும். அங்ஙனங் கூறுங்கால், நகைச் சுவை தோன்றக் குறிப்பாகக் கூறுதல் இன்புறத் தக்கதொன்றாகும். இவ்வங்கதம், வெளிப்படையாகக் கூறுதல், கரந்த மொழியிற் கூறுதல், என இருவகைப்படும் என்பது, முற்கூறிய இரண்டாம் சூத்திரத்தால் அறியப்பட்ட தொன்று. வாய் காவாது சொல்லும் வசையே, இங்குச் செம்பொருளங்கதம் எனப்படும். இதனைச், செவியா லநுபவிக்கப் படும் சொற்சுவை பொருட்சுவைகளை யுணராது, வாயால் நுகரப்படும் உணவின் சுவையிலேயே ஈடுபடும் மனிதர், செத்தால் வரும் இழப்பும், வாழ்ந்தால்வரும் பேறும், இன்மையால், உலகிற்கு அவரால் வருவதுயாது? என்னும் பொருள் தோன்றக் கூறிய, 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினு மென்.' என்னும் திருக்குறளால் அறியலாம். இங்ஙனம் வெளிப்படையாகக் கூறல், நீதி நூற்கு இயல்பன்றிக், கவிநயந் தோன்றக் கூறற்குக் கரந்தமொழியாற் கூறலே சிறந்ததாகும். இதனையே இங்கே குறிப்பிட்ட இறுதிச் சூத்திரம்

புலப்படுத்தும். வசைப் பொருளினைச் செம்பொருள் படாம லிசைப்பது, பழிகரப் பங்கதமென்று பெறப்பட்டமையால், இதுவே Satire என்று கூறுவதற்குப் பொருத்தமாகும். இப் பகுதிக்கும் திருக்குறளிற் பல சான்றுகள் உள்ளன. 'தேவ ரனையர் கயவர் அவருந்தாம், மேவன செய்தொழுக லான்.' என் னுந் திருக்குறளில், நெஞ்சத்து அவல மில்லாத வஞ்சக் கயவர், சாதாரண மண்ணுலக மக்களுக்கு ஒப்பாகார். ஆனால், அவர்கள் உயர்ந்த விண்ணுலகத்து வாழும் தேவர்க்கு ஒப்பாவர்; எதனு லெனின், தேவர்கள், தம்மை நியமிப்பா ரின்றி, எண்ணியவற் றைத் தாமே செய்தொழுகுதல் போலக், கீழ்மக்களும் நல்லன தீயன ஆராயாது, தாம் விரும்புவனவற்றை விலக்கற்பா டின்றிச் செய்தொழுகும் இயல்புடைமையான், என்று குறிக்கப்பட்டுள் ளது. மறைந்த மொழிகளாற் கயவருடைய கயமைக் குணங் களை நகைச் சுவை தோன்ற இடித்துரைக்கும் வள்ளுவர் வாய் மொழியின் மாண்பு, இங்கே நினைக்கத் தக்கது.

வசையெடுத்துக் கூறுங்கால், அவ்வசை யுடையார், அஃ தொழிந்து, திருந்தவேண்டும் என்னும் நோக்கத்தாற் கூறுதல் நன்று. அந்நோக்க மின்றியும் கூறலாம். இவ்விலக்கண அமைதிப்படி, சங்க நூல்களிற் காணப்படும் குறிப்புக்களை ஆராய்தல் இன்பம் பயப்பதொன்று. தொகை நூல்களிற் சிறந்த புறநானூறு என்னும் சங்கச் செய்யுளில், ஔவையார் என்னும் கவி யரசியின் புலமை நலத்தைப் பாராட்டாதா ரிலர். தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தராலும், குறுநில மன்னராலும், போற்றப்பெற்று வாழ்ந்த ஔவைப் பெருமாட்டி, சேரர் குலத் தவரின் உறவினனும், மழவர் என்னும் வீரர்களுக்குத் தலைவ னும், கடை வள்ளல்களில் ஒருவனும் ஆகிய அதியமான் நெடுமா னஞ்சியினிடத்துப் பெரிதும் அன்புடையராய், அவனால் ஆதரிக் கப்பட்டு இருக்குங்கால், காஞ்சி நகரத் திருந்த தொண்டைமான் என்னும் அரசனிடம் தூது விடுக்கப்பட்டு, அவன்பாற் சென் றாள். தொண்டைமான், தன் வீரத்தையும், படைப் பலத்தை யும், ஔவையார் கண்டு விம்மிதம் கொள்ள வேண்டுமென்னும் இறுமாப்புடையனாய், ஔவையை நன்கு வரவேற்றான். ஆயுத

சாலையாகிய படைக்கலக் கொட்டிலைக் காட்டினன். அங்கே வேல், வாள், முதலிய படைகள், திரண்ட அழகிய கைப்பிடிகளை யுடையனவாய், எண்ணெய் பூசப்பட்டு, மயிலிறகு, மாலை முதலி யன அணியப்பட்டுக், காவலையுடைய அகன்ற, அழகிய கட்டிடத் தில், எவராலும் தொடப்படாமல் வைக்கப் பட்டிருத்தலைக் கண்டு, வியந்து கூறுவார் போன்று, செருக்கு மிக்க தோண்டைமான் நெஞ்சில் உறுத்தும் வண்ணம், ஓர் அழகிய பாடலைக் கூறினர். அப்பாடல்,

இவ்வே,
பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்தி நெய்யணிந்து,
கடியுடை வியனக ரவ்வே யவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து,
கொற்றுறைக் குற்றில மாதோ.

என்பதாம். இதன்கண், அதியமான் அடிக்கடி அஞ்சாது செய்யும் போர்ச் செயலிற் றலைப்படுதலால், அவனுடைய படைகள், போரில் உபயோகப்படுத்தப்பட்டுப், பகைவரைக் குத்தியதால், கங்கும், முனையும் சிதைந்து, கொல்லனது பணிக்களரி யாகிய சிறிய கொட்டிலின்க ணுள்ளன என்றும், தோண்டைமான் அத் தகைய போர்ச் செயலிற் றலைப்படாமல், அஞ்சி யொழுகும் இயல்பின னாதலின், அவன் படைக் கலங்கள், எத்தகைய சிதைவு மின்றி, எண்ணெய் பூசப்பட்டு, வனப்புடன், அழகிய மாளிகையில் தூங்குகின்றன என்றும், கூறிய அழகு இன்புறத் தக்கது. தோண்டைமானுடைய ஆயுதங்களைப் புகழ்ந்து கூறுதல் போற் பழித்து, அவன் வசையைக் குறிப்பிற் கூறிச், செருக் கொழியச் செய்த கவியரசியாரின் திறமை பாராட்டத் தக்கது.

இன்னும், 'உவர்க்கட லன்ன செல்வரு முளரே, கிணற் றூற் றன்ன நீயுமா ருளையே.' என்று ஒரு புலவர் ஒரு கொடை வள்ளலைப் புகழ்ந்து கூறுமுகமாகக், கொடாத பெருஞ் செல் வரை இழித்துக் கூறினர். சிலர் பரந்த செல்வ முடைய ராயி னும், அச்செல்வம் பிறர்க்குப் பயன்படாது என்பது தோன்ற, 'உவர்க்கட லன்ன' என்று உவமை கூறப்பட்டது. இது, விளக்க

மாகப் பிறிதோரிடத்து, 'தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல், உண்ணு ராகுப நீர்வேட் டோரே.' என்று கூறப் பட்டது. செல்வப் பரப்புடையேம் எனச் செருக்குறுவார்க்கு இது சுடுசொல்லாகும். ஏனாதி திருக்கள்ளி என்பானை, மதுரைக் குமாரனார் என்னும் புலவர் பாடிய ஒரு பாடலில், அவனுடைய பகையரசரைப் பழித்துரைத்த செய்தி வியக்கத் தக்க முறையில் அமைந்துள்ளது. அப்பாடற் கருத்து, 'அரசே! நீ போரைக் காணின், அப்போரை வென்று, பகைவரது படையை விலக்கி, எதிர் நிற்றலின், அவர் வாட்படையால் வடுப்பட்ட உடலுடனே கூடியிருத்தலின், காண்பார் கண்ணுக்கு அழகுடையை யல்லை. கேட்ட செவிக்கு இனியை. நின் பகைவரோ, போரில் புறமுதுகிட் டோடுதலால், உடம்பில் யாதொரு வடுவு மில்லாராய்க், கண்ணுக்கு இனிய ராவார். கேள்விக்கு இன்னா ராவார். அதனால், நீயு மொன் றினியை யவரு மொன் றினியர். இங்ஙனம் நீயும் நின்பகைவரும் ஒப்புடைய ராகும் நிலையில், நின்னை வியக்கும் இவ்வுலகம்; அஃது என்னோ பெரும!' என்ப தாம். பகைவர் உடம்பில் வடுப்படாமையால், பிறர் கேள்விக்குப் பழி மிக்குடையராக வுள்ளார் என அவர் வசை, ஒருவகை நயந்தோன்றக் கூறப்பட்டது. இங்கே, 'நீயு மொன் றினியை யவரு மொன் றினியர்' எனத் தோற் றோடியவரைப் புகழ்வது போலப் பழித்திருக்கும் செய்தி வியக்கத் தக்க தொன்று.

இனிச், சங்கத்துச் சான்றோர் நூல்களுள், அகப்பொருள் பற்றி எழுந்த பாடல்களில், இவ்வங்கதக் குறிப்புகள் பற்பல இடங்களில் மிக நயம்படக் கூறப்பட்டுள்ளன. கற்றறிந்தா ரேத்தும் கலித்தொகை என்னும் நூலில், மருதத் திணை பற்றிய 'வண்டூது சாந்தம் வடுக்கொள நீவிய' என்னும் பாடற் பகுதி, ஈண்டுச் சிந்தித்து இன்புறத் தக்கது. பரத்தைபாற் சென்று வந்த தலைமகனை, அது குறித்து ஊடல் மேற்கொண்ட தலைமகள், 'நீ புறத்துப் போய்க் கண்ட வினோதம் என்னை?' என்றாளாகத், தலைவன், 'யாமிருவரும் இனிமேல் மேற்கொள்ளத் தக்க வானப்பிரத்த வாழ்க்கைக்கு உதவியா யிருக்கும் முனிவரரைக் கண்டு அவரிடத்தே தங்கினேன்.' என்றான். அது கேட்ட

தலைவி, 'சோலையின் கண்ணே, மலர் சூடிய மான் பேட்டினை ஒத்தவராய்க், கடவுட் டன்மை உள்ளவராக உன்னுற் கருதப் படுவார் பலருள், எக்கடவுளிடம் தங்கினாய்?' என்று கேட்டாள். அவட்கு அவன், 'நம் மண வாழ்க்கைக்கு நன்னாள் வாய்ப்பச் சொன்ன அந்தக் கடவுள் காணெ'ன்று, தன் பரத்தமையை மறைத்து, மீண்டும் கூறினானாக, அது கேட்ட தலைவி, 'நீ கூறியது எனக்கும் ஒக்கும்.' எனத் தனது ஒவ்வாமை தோன்றக் கூறுவாளாய், 'ஐய! தலையைச் சாய்த்து, நாத் தடுமாற, நீ கூறிய சொற்களாலேயே நீ அகப்பட்டுக் கொண்டாய். நீ கண்ட கடவுளரியல்பை உண்மையாக யான் கூறுவேன்; அதனைக் கேட்பாயாக!' எனத் தொடங்கி, 'பெறனசை வேட்கையி னின்குறி வாய்ப்பப், பறிமுறை நேர்ந்த நகையராய்க் கண்டார்க்கு, இறு முறை செய்யும் உருவொடு நும்மில், செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ?' எனவும், 'நறுந்தண் டகரமும் நானமு நாறும், நெறிந்தகுரற் கூந்தல் நாளணிக் கொப்ப, நோக்கிற் பிணி கொள்ளுங் கண்ணொடு மேனாணீ, பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ?' எனவும், 'கண்ட கடவுளர் தம்முளு நின்னை, வெறி கொள் வியன்மார்பு வேறுகச் செய்து, குறிகொளச் செய்தார் யார், சிறுவரைத் தங்கின் வெகுள்வர்.' எனவும், கூறினாள். இப் பாடற் பகுதியின் பொருள் பின் வருமாறு: 'உன்னைப் பெற வேண்டு மென்னும் விருப்பத்தால், நீ குறிப்பிட்ட குறியிடத்தே தப்பாமல் வந்து, விழுந்து முளைத்த பற்களை யுடையராய்க், கண்டவர்களுக்கு மரணத் துன்பத்தை யொத்த மயக்கத்தைச் செய்யும் வடிவுடையராய், நின் இல்லிடத்தே சேரும் முறைமையினை யுடைய கடவுளரைக் கண்டாயோ?' என்பதும், 'பார்வையாலே தம் வயப்படுத்துங் கண்கள் வருந்துதலால், மணமிக்க குளிர்ந்த மயிர்ச் சாந்தமும், புழுகும் மணக்கும், கருமணல் போன்ற, நெருங்கிய கூந்தலுக்கு, நாட்காலத்துச் செய்யும் அலங் காரத்துக்குப் பொருந்த முதல் நாளே மலர்களைத் தூவி வழி படப்பெற்ற கடவுளைக் கண்டாயோ?' என்பதும், 'அங்ஙனம் கண்ட கடவுளருள், நின் மனத்தை வேறுகப் பண்ணி, வானப் பிரத்த ஆச்சிரமத்தை மேற்கொள்ளச் செய்த முனிவரர்

யாவரோ? அவர் பாற் செல்லாது, சிறிது பொழுது நீ இங்கே தங்கினும் அவர் வெகுள்வர்; ஆதலின், அவ்விடத்தே செல்வாயாக!' என்பதும் ஆம். இப்பகுதியால், தலைமகன் பரத்தையர்பாலொழுகிய தீயொழுக்கத்தைக் கடிந்து, அவன் திருந்தியொழுக வேண்டுமென்னும் கருத்தினளாய்த், தலைவி குறிப்பிற் கூறிய வசைமொழி புலப்படுதலின், இதுவும், பழிகரப்பு அங்கதத்தின் பாற் படுவதாகும்.

ஐங்குறுநூறு என்னும் சங்கச் செய்யுளில், உள்ளுறையாகக் கூறப்பட்ட பாடற் பகுதிகளில், இச்சுடுசொல்லாகிய அங்கதம் பல இடத்தும் நகைக் குறிப்புத் தோன்றப் புலப்படுக்கப் பட்டுள்ளன. பரத்தமை யாகிய புறத்தொழுக்கத்திலே ஒழுகி வந்த தலைமகனை நோக்கி, தோழி, தன் விருப்பம் இன்னதெனக் கூறுமுகமாக,

> பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற்
> கழனி யூரன் மார்பு
> பழன மாகற்க எனவேட் டேமே.

எனக் கூறினள். இதன்கண், பூத்துப் பயன் படாக் கரும்பினையும், காய்த்துப் பயன்படும் நெல்லினையும், உடைய ஊரன் என்றது, ஈன்று பயன்படாப் பொதுமகளிரையும், குழந்தை பெற்றுப் பயன்படும் குலமகளிரையும் ஒப்பாக நினைப்பவன் தலைவன் என்று, அவனுடைய குறை வருணனைக் குறிப்பில் புலப்படுக்கப் பட்டுள்ளது. இன்னும், 'கரும்புநடு பாத்தியுட் கலித்த ஆம்பல், சுரும்புபசி களையும் பெரும்புன லூர!' என்று, தலைவனை அழைக்கும் முகமாகப், 'பரத்தையர் தங்குதற்கு உரிய இல்வில் யானிருந்து, விருந்தினர் முதலியோரை உபசரிக்கலானேன்.' என்று தலைவி தலைவனது தீய வொழுக்கத்தைக் கடிந்து, அவன் நெஞ்சுற உணர்த்தியது புலனும். இங்கே, கரும்பு நடுதற்காக அமைக்கப்பட்ட பாத்தி என்றதனால், தலைவனுக் குகந்த விலைமாதர் தங்குதற் குரியது இவ்வில்லம் என்பதும், அப்பாத்தியில் தானே தோன்றி, வண்டுகளின் பசியைப் போக்கும் ஆம்பல்

என்றதனால், தலைவன் விரும்பாத நிலைமையில் தான் அவ்வில்லத்தின்கண்ணிருந்து இயன்றவாறு இல்லறம் நடத்துபவள் என்பதும், இவ்வருணனையில் உள்ளுறையாகப் புலப்படுக்கப்பட்டுள்ளன.

அகநானூறு என்னும் அழகிய சங்க நூலில், மருதத் திணை பற்றிய செய்யுளொன்றில், பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகன், யாரையும் அறியேனென்றானாக, அவன் தீயவொழுக்கத்தைத் தலைவி, பிறிதொரு நிகழ்ச்சியால், அவன் மனத்திற் பதிய அறிவுறுத்திய செய்தி பின் வருமாறு: 'ஐய! மழலை மொழியுடைய இளம் புதல்வனைத் தேர் வழங்கு தெருவிற் கண்ட ஒருத்தி, அப்புதல்வன் நின் உருவோடு ஒத்து விளங்குதலைக் கண்டு விரும்பி, அங்கே அப்பொழுது யாரும் இல்லாமையால், 'என் கண்ணே! வருக!' என்று கூறிப், பெரிதும் மகிழ்ந்து, தழுவி, எடுத்துக் கொண்டாள். அந்நிலையில், யான் அங்கே சென்று, 'குற்ற மற்ற சிறியவளே! ஏன் மயங்குகின்றாய்? இவனுக்கு நீயும் தாயே ஆவாய்.' என்று கூறினேனாக, அது கேட்டு அவள், தாம் செய்த களவு, பலர் முன்னிலையில் வெளிப்பட உடன்பட்டு நின்றாரைப்போல, நாணமுற்றுத், தலை கவிழ்ந்து நின்றாள். அந்நிலையில், அவளும் நின் மகனுக்குத் தாயாவாளெனக் கொண்டு, அவளை உபசரித்தேனன்றே.' என்று தலைமகள் கூறியதாகும். இதன்கண், தலைவனது தீய வொழுக்கத்தைத் தலைவி, கரந்த மொழியிற் பெறவைத்தது, அறிந்து இன்புறத் தக்கது.

இனிப், பெருங்காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியில், சச்சந்தன் என்னும் அரசன், விசயை என்னும் தன் மனைவியின் காதல் வயப்பட்டுக், கட்டியங்காரன் என்னும் அமைச்சன்பால் அரசியலை விட்டு, இடையறாத போக நுகர்ச்சியில் தலைப்பட்டானாக, அந்நிலையில், அத்தீய அமைச்சன், அரசனைத் தொலைத்து, நாடாட்சியைத் தன்னதாக்க முயன்று, தன்னமைச்சர் பலரொடு சூழ்ந்து ஆலோசிக்குமளவில், தருமதத்தன் என்னும் நல்லமைச்சன், இது தகாத காரியம் என்று பற்பல

நீதிகளை எடுத்துரைக்க, அவன் உரைகளை மறுத்து, மதனன் என்பான், கட்டியங்காரன் கருத்துக்கு ஒத்த முறையிற் கூறிய தாகவுள்ள செய்தி, பின்வரும் செய்யுளிற் காணப்படும்.

தோளினால் வலிய ராகித் தொக்கவர் தலைகள் பாற
வாளினாற்பேச லல்லால் வாயினாற் பேசல் தேற்றேன்
காளமே கங்கள் சொல்லிக் கருனையாற் குழைக்குங் கைகள்
வாளமர் நீந்தும் போழ்து வழுவழுத் தொழியு மென்றான்.

இதன்கட் பின் இரண்டடிகளும் இங்கே நினைக்கத் தக்கன. போர்ச் செயலைப் பற்றிய வீரவுரைகளைக் காளமேகம் போல முழங்கக் கூறி, அச்செயலிற் றலைப்பட நேர்ந்தபொழுது அஞ்சு வார்க்குப், பொரிக் கறிகளோடு சோற்றைத் திரட்டும் அவர் கைகள், அப்போர்க் கடலை நீந்துதற்கு இயலாது வழுவழுத் தொழியும் போலும், என்று போர் குறித்துப் பின் வாங்கு வோரைச் சுடு சொல்லாற் பழித்துக் கூறியதும் அங்கதத்தின் பாற் படுவதாகும்.

# நன்கொடைகள்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| **போது.** | | | |
| திரு. மாணிக்கவாசகம் பிள்ளை, தென்காசி | .... | 10 | 0 |
| ,, ரெ. திருமலை அய்யங்கார் | .... | 1 | 0 |
| ,, ம. பாலசுப்பிரமணிய முதலியார் | .... | 0 | 8 |
| **திக்கற்ற மாணவ ரில்லம்** | | | |
| திரு. பஞ்சநதம் பிள்ளை வழி; | | | |
| ,, கோவிந்தராசலு தம் திருமணம் | .... | 2 | 0 |
| **கல்லூரி** | | | |
| ,, நே. அ. அ. ஜினகுமார முதலியார் | .... | 0 | 8 |
| **புலவர் கல்லூரி** | | | |
| திரு. சா. கஜேந்திரன், திரு. மா. துரைசாமி வழி: | | | |
| ,, தி. மா. இராச கவுண்டர் (திருப்புத்தூர், பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்) | .... | 1 | 0 |
| ,, து. கிருட்டினமூர்த்தி | .... | 1 | 0 |
| ,, தி. பா. சம்பந்தம் (திருப்புத்தூர், வ. ஆ. மாவட்டம்) | .... | 1 | 0 |
| ,, இராமானுசம் | ... | 1 | 0 |
| ,, அ. மு. சுந்தரம் (சென்னை) | .... | 1 | 0 |

# காட்சி யளவை

திரு. த. இராமநாத பிள்ளை, பி.ஏ. (இலண்டன்), சுன்னுகம், இலங்கை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் ௬, பக்கம் 240.)

## ஆராய்ச்சி முறை

### 1. வாயிற் காட்சி

இந் நில வுலகின்கண்ணே தோன்றி நின்று அழியுந் தோற்றங்கள் எல்லாம் ஓரே தன்மையவாய்க், காலத்துக்குக் காலம் மாறுத லடைகின்றன. இந் நிலையாமை உலகின் இயல்பெனச் சிந்தித்துப், பொருட்களின் மாறுதல் முறைகளைச் சிலர் பொருட்படுத்தாது வாழ்கின்றனர். தோற்றங்கள் ஒவ்வொரு நாளும் பல்லாயிரக் கணக்காக நிகழ்கின்றமையால், அவை முறையில்லாமல் காரண காரிய ஒழுங்கின்றியே தோன்றுவன எனச் சிலர் நினைத்து மாறுதல் முறைகளை ஆராய்கின்றிலர். சிலர் தத்தம் முயற்சிகளில் ஊக்கத்தைச் செலுத்தித், திரவியந்தேடுவதில் காலத்தைப் போக்கி, உலகத் தோற்றங்களை ஊனக் கண்ணால் கண்டாலும், காணுதவராகவே இன்புற்று வாழ்கின்றனர். சிலர், சிற்றின்பங்களில் அமிழ்ந்தி, அவ்வாறு அளவுகடந்து இன்புறுதல் துன்பத்திற்கு ஏதுவாகுமெனவே யோசிக்க ஆற்றல் இல்லாதவராய், மோகங்களால் பந்திக்கப்பட்டு மயங்குகிறுர்கள். பற்றே மக்களின் முயற்சியை நிச்சயிக்கின்ற தாகையால், பற்றுள்ள பொருட்களிலேயே தம் கவனத்தைச் செலுத்துகின்றுர்கள். மக்கள் தத்தம் முயற்சிகளில் ஊக்கமாக விருக்கிறுர்கள். அவ் வூக்கத்தின் காரணம் அம் முயற்சியால் அடையும் பயனே. இக் கவர்ச்சி (interest) ஒவ்வொருவருக்கும் சிறப்பா யுளதாகையால், ஒருவர் ஒரு பொருளிலும், வேறெருவர் வேறெரு பொருளிலும் கவர்ச்சி யுடையராகின்றனர். ஒருவர் தம் முயற்சியில் ஊக்கமாகவும், பிறர் அம் முயற்சியின்கண்

ஊக்கமின்றியும் இருத்தற்குக் காரணம் இக் கவர்ச்சி நலமே. காட்சிகளை ஆராய்தலில் வேட்கையில்லாதோர், உலகம் தோன்றி நின்றழியும் முறைகளைப் பொருட்படுத்தாது இருக்கின்றார்கள். எமது வாயிற் காட்சிகள் எல்லாம் காட்சிக ளல்ல. வாயிற் காட்சி யென்பது வாயில்களால் உணரப்படும் உணர்வு. வாயில், பொறி, புலன் என்பன ஒரு பொருட் சிளவிகள். வாயில்களால் காணும் போது, பல போலிக் காட்சிகளைப் பெறுகிறோம். போலிக் காட்சிகளைக் காண்கின்றமையால், வாயில்களா லன்றிக் காண இயலுமாயின் காண்க. ஆனால் காட்சிகளைப் போலிக் காட்சி யாக்குவது உள்ளமே. உள்ளம், தன் மெய்ப்பாடுகளால் தடைக்குற்றுக், காட்சிகளைச் செவ்வையாகக் காணாது, உள்ளத் தைச் சுத்தமாக்கினால் தான் மாசற்ற காட்சிகளைக் காணலாம். மேனாட்டார் இவ்வாறு உள்ளத் துடக்கை நீக்காமல், கண், காது முதலிய இந்திரியங்களைத் திருத்த முயலுகின்றனர். கண் ணுக்கு பலப்பல கண்ணாடிகளின் உதவி வேண்டுமென நினைத்துப், (உள் வளைவு, புற வளைவுள்ள) பல வில்லைக் கண்ணாடிகளை உப யோகிக்கிறார்கள். இக் கண்ணாடிகள் மூலமாகத் தெளிவான காட்சிகளை எய்தலா மெனத் துணிகின்றனர். கண்ணாடி மூல மாகப் பார்க்கும்போது, கண்ணாடி, தன் நிறத்தைப் பொருளுக்கு அமைத்துப், பொருளின் நிறத்தை விகற்பித்தே காட்டும். இனி, நிற மில்லாத பளிங்கேனின், அதன் வளைவு பொருளின் உருவத்தை விகற்பித்துப் போலிக் காட்சியையே தருகின்றது. கண்ணுக்குத் தெரியாத சில அணுக்களைக் காண்பதற்குப் பெரு நோக்காடி (Microscope) உதவு மெனின், அது ஒக்கும். எனினும், அவ் வுணர்வு ஒரு மயக்க வுணர்வே. தொலை நோக்காடி (Telescope) சேய்மையிலுள்ள பொருளை அண்மையாகக் காட்டு கின்றது. கண்ணாடி காட்சிக்கு உதவியாகின்றது எனினும், காட்சிகளைச் சுத்தமான கண்ணால் காண்பதே உத்தமம்.

## 2. காண்டல்

ஐம்புலன்களே வாயிற் காட்சிகளை உணர்கின்றன. ஏனைய இந்திரியங்களைப் போலன்றி, பொருட்களைத் தானே சென்றி யைந் தறிதலால், கண்ணிந்திரியமே ஞானேந்திரியங்களில்

சிறந்தது. காண்டல் என்புழி, கண் ணிந்திரியத் தொழிலையே சிறப்பாக உணர்த்துகிறது. எத்தனை எத்தனை காட்சிகள் எல்லாம் கட்புலனாயினும், அவை காட்சியல்ல என்பதை விளக்கினும். காட்சிகளைத் தெரிவு செய்தே ஆராய்கிறோம். ஒரு ஆராய்ச்சிக்கு வேண்டிய காட்சிகளையே தெரிவு செய்து காண வேண்டும். தெரிவு செய்து காணும் காட்சிகளின் ஒப்பு வேற்றுமை நோக்கி மானதக்காட்சி ஒன்றைப் பெறுவதே காண்டலின் இயல்பாகும். இங்ஙனம் பல்லாயிரக் காட்சிகளில் சிலவற்றையே காண்டல் செய்கிறோம். எமது கவர்ச்சி எம்மை உந்தும் வழியே, அக்கவர்ச்சிக் குரிய காட்சிகளைத் தெரிவுசெய்து விடயிக்கிறோம். மக்களுக்கு எப்பொருளில் கவர்ச்சி யுண்டோ அப்பொருளையே தெரிவு செய்வர். காண்டலே எங்கள் பிரமாணங்கள்; எல்லாவற்றிற்கும் ஆதாரம். காண்டலும் கருதலுமே அளவைகளில் சிறந்தவை யென முன்னோர் அமையத்தில் கூறினும். ஈண்டுக் காண்டல், ஆராய்ச்சி முறைகளில் அடிப்படையான முறை யென்பதையும், காண்டல், ஆராய்ச்சி முறைகள் யாவற்றிற்கும் ஆதாரமென்பதையும் விளக்குவாம். நீராவி யந்திரத்தை உண்டாக்கிய **யேம்ஸ் உவையார்** (James Wyatt), நீராவி தொழிற் செய்யும் வலியுடைய தென்பதைக் காண்டலாலே அறிந்தனர். அட்டிலில் ஒவ்வொரு நாளும் நிகழும் காட்சியைத் தெரிந்து நோக்கியவர் இவர் ஒருவரே. இக்காண்டலின் பயனாக, நீராவியால் இயக்கப்படும் நீராவி வண்டிலைச் செய்தனர். ஒரு ஆராய்ச்சிக்கு ஆராய்ச்சிப் பொருள்வேண்டும். ஆராய்ச்சி முறைகளின் ஆராய்ச்சிப் பொருள் காட்சிகளே. ஆராய்ச்சி முறைகளுக்குக் காட்சிகள் பலவாகவும், குற்ற மில்லாதவை யாகவும் இருத்தல்வேண்டும். காட்சிகளுள் ஐயக் காட்சி, திரிபுக் காட்சிகளை நீக்கிச், சுத்தமான காட்சிகளையே ஆராய்கிறோம். ஒரு தோற்றத்தை அதனோடு ஒப்புடைய வேறொரு தோற்றத்தோடு மயங்குதல் திரிபுக் காட்சியாகும். கயிற்றை அரவாகக் காணுதல் திரிபுக் காட்சி. திரிபுக் காட்சிகளை மயக்கமென உள நூலார் மொழிவர். திரிபிற்குக் காரணம் அச்சம், அன்பு முதலிய மெய்ப்பாடுகள். ' ஒருபொருளின் உண்மையை அறிந்து

இது யாதோ வென ஒன்றில் துணிவு பிறவாது, ஆராயும் ஞான சத்தி ஐயம்' என்பர் சித்தியார். ஒரு காட்சி நிருவிகற்ப மாகத் தோற்றும் நிலையில் ஐயக் காட்சி யாகும். தோன்றிய உரு குற்றியோ மகனோ என்றாற்போல ஐயப்படுவது ஒருநிலை. இவ்வையத்தை நீக்குதற்கு விடயப் பொருளைப் பெயர், சாதி, குணம், தொழில் முதலியவற்றால் நிச்சயிக்கவேண்டும். ஐயக் காட்சிகளை ஆராய்ச்சியின் பயனாய் இலகுவாய் நீக்கலாம். சோம் பல், பொச்சாப்பு முதலியவற்றின் காரணமாகவே ஐயக் காட்சி களைத் தெளிவான காட்சிக ளாக்காமல் இருக்கிறோம். திரிபுக் காட்சியும் ஐயக் காட்சியும் போலிக் கிடனாகும். இயற்கை யாராய்ச்சி நூலோர், இத்திரிபு, ஐயம் ஆகிய போலிக் காட்சிகளை நுட்பமாக ஆராய்கின்றனர். பலவிடத்தும் பல காலங்களிலும் ஒரு பொருளைக் காண்டல் செய்து அதன் சொரூபத்தை அறி கின்றனர். கண் ணிந்திரியத்தால் காண வியலாத அணுக்களைப் பெருநோக் காடியால் காண்கின்றனர். வான நூலோர் தொலை நோக்காடியால் வான்மீன்களின் தோற்றத்தை ஆராய்கிறார்கள். காண்டலுக்குத் துணைக் காரணம் புலன்கள். யந்திரங்களைத் துணைக் காரண மென்னோம், கண்ணாடிகளின் உதவி யின்றியே பெரும்பாலும் காண்கிறோ மாகலின்.

## 3. பரிசோதனை (Experiment)

யந்திரங்களைத் துணைக் காரணமாகக் கொண்டு காண்டல் செய்யின், அது பரிசோதனை என்னும் அளவை யாகும். காணும் போது பொருட்களை இயற்கையில் உள்ளவாறே காணுகிறோம். பூமி சூரியனைச் சுற்றிச் சுழல்கின்றது என்பது காண்டலால் அறி யப்படுகிறது. சூரியனின் நிலைகளை மாதத்திற்கு மாதம் குறித்து, ஒரு இரேகை ஒன்றில் அமைத்துப், பூமியின் பாதை நீள வட்டமெனத் தீர்மானிக்கப்பட்டது. காண்பதற்காக நாம் பூமி யைச் சொற்ப நேரத்துக்கேனும் சுழலாமல் நிறுத்த வியலாது. இயற்கையி லுள்ள காட்சிகள் இயல்பாகத் தோற்றும் போதும் காணுதல் காண்டல் எனப்படும். ஆராயும் பொருட்களை நமது ஆராய்ச்சிக்கு வேண்டியவாறு நிறுத்தியும், மாற்றியும், கூட்டியும்,

குறைத்தும், பொருட்களின் பண்புகளை ஆராய்தல் பரிசோதனை எனப்படும். பயிர்நூல், விலங்கியல்நூல், வானநூல் முதயவற்றில் ஆராய்ச்சிக் கேற்பப் பொருட்களை விகற்பிக்க வியலாது. சிங்கத்தின் மூர்க்கத்தை ஆராய்வோர், 'சிங்கமே, உனது மூர்க்கத்தின் இயல்பை ஆராயப்போகிறோம். கர்ச்சியாதே.' என்றால் கேட்குமா? விலங்குகளை நூதன சாலைகளில் வளர்த்து, அவற்றின் பழக்கங்களைக் காட்சி செய்தறிகின்றனர். சிற்சில பரிசோதனையும் செய்யலாம். வான நூலோர் பரிசோதனை செய்ய முடியாது. வான் மீன்களின் வேகத்தைக் குறைக்க வியலாது. இனி, ஒளி, ஒலி, சூடு, மின்சாரம் முதலியவற்றை ஆராயும் பௌதிக நூலும், பொருணூலும் பரிசோதனையைப் பெரிதும் வேண்டி நிற்பன. பூதப் பொருட்களை எமது ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு புணர்த்தியும், பிரித்தும், கலந்தும், பலவாறு மாற்றி ஆராயலாம். பரிசோதனை செய்யும்போது காண்டலே செய்கிறோம். நீர்,பிராண வாயுவும் எரி வாயுவும் உடைய கூட்டுப் பொருளெனப் பரிசோதனையால் அவ்வாயுக்களை வகுத்தும் அறிந்தோமாயின், காட்சி வலி யுடையதாகும். நீரை மொண்டு, பாத்திரத்தில் வைத்து, மின் ஊட்டி, மின் சாரத்தின் வலியால் வாயுக்களாகப் பிரிக்கலாம். இரு பகுதி எரி வாயுவும் ஒரு பகுதி பிராணவாயுவும் புணர்ந்தே நீர் தோற்றுகின்றதென அறிவேம். பிராண வாயுவையும் எரி வாயுவையும் கலந்து, மின்சாரத்தாலேனும் தீயாலேனும் புணர்த்தினால், நீர் தோற்றுகின்றது. இது நிற்க, பரிசோதனைக் கேற்ற சாலைகள் வேண்டும். பரிசோதனைச் சாலைகள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. மேனாட்டார் பெருஞ் செலவு செய்து கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் பரிசோதனைச் சாலைகளை ஆராய்ச்சிக்கு உதவியாக அமைத்திருக்கின்றனர். பரிசோதனைக்குச் சாலை மாத்திரமன்று; யந்திரங்கள், கருவிகள், கண்ணாடிகள், வில்லைகள் (lenses), பூதப் பொருள்கள் எனப் பலவகைத் துணைக் காரணம் வேண்டும். பொருணூலாராய்ச்சிக்கும் பௌதிக நூலாராய்ச்சிக்கும் பரிசோதனை இன்றியமையாதது. இயற்கை யாராய்ச்சி முறைகளுக்கு அடிப்படையான அளவைகள், காண்டலும் பரிசோதனையுமே. பரிசோதனை

காண்டலில் அடங்குமாதலான், காண்டலே ஆராய்ச்சிகளுக்கு ஆதாரம். ஆனதுபற்றிக் காண்டற் போலிகளைக் களைக.

## 4. ஐவகை ஆராய்ச்சி முறைகள்

முன்னிகழ்ச்சி, பின்னிகழ்ச்சி, உடனிகழ்ச்சி யாகுந் தோற்றங்களைக் காண்டலால் அறிந்தாலும், அவற்றின் காரண காரியத் தொடர்பை நிரூபித்தற்கு ஐம்முறைகள் உண்டு. அவை தனியொப்பு முறை, தனி வேற்றுமை முறை, ஒப்பு வேற்றுமைக் கூட்டு முறை, ஏற்றத் தாழ்ச்சி முறை, ஒழிபு முறை என்பன. இயற்கை யாராய்ச்சிகள் கூறும் பிரமாணங்கள் எல்லாம் ஐம் முறைகளில் ஒன்றாலும் பலவற்றாலும் நிச்சயிக்கப்பட்டன. இவ்வைந்து முறைகளால் காலத்தானும் இடத்தானும் ஏகதேசப் படும் பொருட்களை ஆராய்ந்து, அவற்றின் பிரமாணங்களை அறியலாமென ஆசிரியர் மில் செப்பினர். மில் என்பவரே, ஐவகை முறைகளையும் ஆராய்ச்சி முறையாக முதன் முதல் மொழிந்தவர். ஐவகை முறையும், பொருட்களின் ஒப்பு வேற்றுமைகளை ஆராய்ந்தே, பிரமாணங்களை நிச்சயிக்கின்றன. ஐவகை முறைகளும் காண்டலின்றி அமையா என்பதை உய்த்துணர்க. இம் முறைகளை விளக்குதற்காக எடுத்தோதப்படும் உதாரணங்களில் ஆராய்ச்சி முறைகளை ஆராய்ந் தறிக. பரிசோதனையின் நுட்பத்தினையும் அளவைகளின், திறனையும்வந்துழி வந்துழிக் காண்க. இயற்கையாராய்ச்சி வல்லோர் யாவரும் இம்முறைகளைக் கைப் பற்றி ஆராய்ந்தனர் என்பதைக் காட்டுதும். தருக்க நூலோர் இவ்வைந்து முறைகளையும் ஆராய்ச்சி முறையென அழைக்கின்றனர்.

## 5. தனி யொப்பு முறை

பல காட்சிகள் ஒரு பண்பால் ஒப்பாகின், அக்காட்சிப் பொருட்கள் காரண காரியத் தொடர்புடையன எனத் துணிகிறோம். எண்ணல் முறையும் ஒப்புர், தனி யொப்பு முறையில் உபயோகப்படுகின்றன. தனியொப்பு முறையின் ஆதாரம் காண்டல் மாத்திரமே. பரிசோதனை செய்ய வியலாத பொருட்களைத்

தனியொப்பு முறையாலே ஆராய்கிறோம். விகரம் என்னும் தோற்றத்தின் காரணத்தை ஆராய்வான் தொடங்கி, விகரத் தோற்றத்தின் காரண சந்தர்ப்பத்தைக் காட்சி செய்வோம். ஒரு தருணத்தில் விகரம் 'எயரவ' என்னும் சந்தர்ப்பத்தில் தோற்றியும், வேறோர் தருணத்தில் 'வழஎந' என்னும் சந்தர்ப் பத்தில் தோற்றியும், வேறோர் தருணத்தில் 'வயழஎ' என்னும் சந்தர்ப்பத்தில் தோற்றியும், இங்ஙனம் தனியொப்பாகி நிகழு மாயின், எகரமும் விகரமும் காரண காரியத் தொடர்புடையன வெனத் துணிகிறோம். இரு முன்னிகழ்ச்சிகள் உண்டாயின், இரண்டும் காரணமெனத் துணியப்படும். தனியொப்பு முறை யின் துணிபை, யாண்டு எகரம் ஆண்டு விகரம் என்ற முறை யாக மொழியலாம். இரண்டு முன்னிகழ்ச்சிகள் உண்டாயின், எது சரியான காரணமென இம்முறையால் நிச்சயிக்க வியலாது. தனியொப்பு முறையால் ஆராய்தற்குப் பலவேதுக் கொள்கை இடராகின்றது. தனியொப்பு முறையின் துணிபு வலியுடைய தெனத் தீர்மானிக்கப்படினும்,இலகுவாய் இம்முறையைத்தழுவி இயற்கைப் பிரமாணங்களை அறியலாமென நினைத்தல் பிழை. ஒப்பைக் காணுதல் இலகுவன்று. காட்சிகளைத் தேடித் திரிவ தில் பல காலம் கழிக்கவேண்டும். கிரகணத்தின் காரணம் ஆராய்ச்சிப் பொருள் என்றால், அக்காட்சிகள் பலவேண்டும். அக்காட்சிகள் ஒரு வருடத்திற்கு ஒன்று கிடைப்பதே அருமை. காட்சிகளுண்டாயின், தனியொப்பு முறையால் ஒரு பிரமாணத் தைத்துணிதல் இலகுவாகும். இனிக் காட்சிகள் பலவாதலன்றி, வேற்றுமையாகவும் இருத்தல்வேண்டும். காட்சிகளின் தொகை அதிகமாக, அவற்றின் தன்மை எவ்வளவு வேற்றுமையாகுமோ, அவ்வளவிற்கு வலியுடைய தாகும்.

## ஒப்பு முறையின் துணிபு. ஒப்பு முறையின் இலக்கணம்.

'இரு தோற்றங்கள் ஒன்று ஒன்றன் முன்னிகழ்ச்சியாக வேனும் உடனிகழ்ச்சியாகவேனும் இருப்பின், காரண காரியத் தொடர்புடையன ; இத்துணிபு, காட்சிகள் பலவாகவும் வேற் றுமையாகவும் இருப்பின், நற்றுணிபாகும்.' ஒப்புள்ள இரு

தோற்றங்கள் சிலவற்றையே காட்சியாகக்கொண்டு இத்துணிபைப் பெறுகிறேம். எண்ணல் முறையில் எல்லாக் காட்சிகளையும் எண்ணுகிறேம். ஒப்பு முறையில் ஒப்பின் பண்பைச் சில காட்சிகளில் ஆராய்கிறேம். எண்ணல் முறையில் ஒப்பின் சொரூபத்தை ஆராயாமல் பொதுக் காட்சியாக ஆராய்கிறேம். எண்ணல் முறை கூட்டுண்மையைக் கூறும். ஒப்பு முறை காரண காரியத் துணிபை நாட்டும். ஒப்பு முறையின் துணிபின் நலத்தைப் பின்வரும் உதாரணத்தால் ஆராய்ந்தறிக.

## 6. முதலாம் உதாரணம்

கி. பி. 13-ஆம் நூற்ருண்டில் **உரோசர் பேக்கன்** (Roger Bacon) என்னும் ஆங்கில மகன் ஒருவர் வானவில்லின் அழகைப் பார்த்து வியப்படைந்தனர். பல நிறங்கள் தோற்றுதற்குக் காரணம் யாதென ஆராய எத்தனித்தனர். ஆங்கில இலக்கியங்களில் பளிங்கு வானம் எனப் பலவிடங்களில் கூறப்பட்டுளதாகவின், ஒளியோடு பளிங்கு சம்பந்தமுடைய பொருளெனநினைத்துப், பளிங்கின் இயல்பையும் ஆராய்ந்தார். வான வில்லுப் போலச் சில பளிங்கும் எழுவகை நிறங்களையும் தோற்றுவிக்கிறதென்பதைக் குறித்தார். வேறுபல பூதப் பொருட்களூடாகவும் ஒளிக்கற்றை செல்லும்போது பல நிறமாக மாறுதலடைவதையும் கண்டார். பனித்துளிகளில் உள்ள ஒளியும் பல நிறமாகத் தோற்றுவதைக் கண்டார். ஆறுகள் குதித்துப் பாயும்போதும், ஒளியினது கதிர் எழுவகை நிறமாக மாறுதலை உணர்ந்தார். கட்டு மரத்தைச் செலுத்தும்போதும், சவள் வலிப்பதால் எழும் நீரிலும் பல நிறத்தை நோக்கினர். இங்ஙனம் பல காட்சிகளை ஆராய்ந்து, ஞாயிற்றினது ஒளி பல நிறக் கதிர்களை உடையதெனத் துணிந்தார். இத்துணிபு காரணமென்ன என்பதைக் காட்டவில்லை. வெண்மை நிறமான ஒளி சிவப்பு பச்சை மஞ்சள் முதலிய நிறங்களாக மாறுதற்குக் காரணம் என்ன என்பதைத் துணிதற்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஒப்பு முறையால் பளிங்கும் நீரும் ஒளியைப் பல நிறமாகக் காட்டுந் தன்மை உடையவையென அறியலாமொழிய, காரணமென்ன என்பதை அறிய வியலாது. வான வில்லின் நீர்த் துளிகள் முக்கோண வட்ட வடிவங்கள் உடையன. இவ்வாராய்ச்சியை வேருேர் முறையின் உதாரணமாகப் பின்னர்த் தொடர்வாம்.

(தொடரும்)

# கலைச்சொல் லாக்கம்

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., ஐயன்பேட்டை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰சு, மலர் ஏ, பக்கம் 263.)

19. Concentric-ஒருமைய என்பதினும் பொதுமைய என்பது பொருத்தமுடைத்தாதல் காண்க.

20. Cone, Prism-இரண்டும் கூம்பியிருத்தலின், **கூம்பு** எனவும், முன்னது அடிமுதல் நுனிவரை குறுகிவரும் வட்டங்களாலாய கூம்பாதலின், **வட்டக் கூம்பு** எனவும், பிந்தியது பட்டைகளாலாய கூம்பாதலின், **பட்டைக் கூம்பு** எனவும் பட்டன.

21. Cosine-கிடக்கை (கிட) எனவும், இதனோடொத்த Sine-நெடுக்கை (நெடு), Tangent-இருக்கை (இரு) எனவும், இவற்றிற்கு எதிரிடையாய Cosecant, Secant, Cotangent முறையே எதிர் கிடக்கை (எ. கி.), எதிர் நெடுக்கை (எ. நெ.), எதிர் இருக்கை (எ. இ.) எனவும் படுகின்றன. இவற்றுள், கிடக்கை, இருக்கை உலக வழக்கில் வேறு பொருளுடையன வாதலாலும், நெடுக்கை தரை நூலில் Longitude எனும் பொருள் பெறுகின்றமையாலும், இம்முரண்பாட்டைக், கூடுமாயின், நீக்கிவிடல் நன்றாதலாலும், இவற்றின் அடியங்கள் (Roots) முறை பிறழ்ந்திருப்பதாலும், இவற்றின் குறியீடுகள் (Symbols) ஒலியிசை (Euphony) பெறுமையாலும், இவை யாவுங் குறைபாடுடையன வாகும். இவற்றைத் திருத்தமாகப் பெயரிடுமுறை பின் வருமாறு:—

$$\text{Sine} = \frac{\text{Perpendicular}}{\text{Hypotenuse}} = \frac{\text{குத்துச் சிறை}}{\text{செஞ் சிறை}}.$$

அதாவது, **குத்துச்** சிறைக்குஞ் **செஞ்சிறை**க்கு முள்ள தகவு ஆகும். இதனைச் சுருக்கி, **குத்துசேவ்வு** எனவும், இவ்வாறே, Cosine, Tangent-ஐ **அடிசேவ்வு**, **குத்தடிவு** எனவும், இவற்றின் எதிராய Secant, Cosecant, Cotangent-ஐ **எதிர் குத்து சேவ்வு, எதிர் அடிசேவ்வு, எதிர் குத்தடிவு** எனவுங் குறுக்கல் முறையாம்; இவற்றின் குறியீடுகளைக், **குவ்வு**, **அவ்வு**,

குவவ்வு, எகுவ்வு, எவவ்வு, ஏகுவவ்வு, எனவுங் கொளல் எளிதாம். எனவே, Sin A, Cosine β, Tan ø, Sec α, Cosec B, Cotan γ என்பவற்றைக், குவ்வு அ, அவ்வு ஈ, குவவ்வு தீ, எகுவ்வு ஆ, ஏவவ்வு இ, எகுவவ்வு ஊ என வழைத்தல், ஒலியிசைப் பொருத்தம் பெற்ற முறையாம். இவையடங்கிய ஓர் கோண கணித சமன் பாட்டை வாசிக்கு முறை பின்னர்க் காட்டுதும்.

22. Congruence—அடங்கலுமொப்பு என்பதினும் முழு ஒப்பு, முழுஒப்புமை; Congruent—முழு ஒப்புடைய என்பன சுருக்கமுடையன.

23. Cubed-முப்படி. Cube root-முப்படி மூலம்; இதனைச் சுருக்கி, மும்மூலம் எனல் எளிதாம். Square-இருபடி, Square root-இருமூலம்; To the power of 4-நாற்படி, Fourth root-நாமூலம், என்றிவ்வாறு தமிழிற் கூறல், ஆங்கிலத்தினுஞ் சுருங்கியதாகும். இவை அடங்கியதோர் சமன்பாட்டைப் பின்னர்த் தமிழில் வாசித்துக் காட்டுதும்.

24. Cylinder-வட்டவுருட்டு, உருளை. Prism என்பது பட்டை பட்டையாக விருந்து, உருட்டுப்படக் கூடியதாதலின் பட்டையுருட்டு எனவும், எண்ணிறந்த (infinite) பட்டைகளுடன் கூடிய Clyinder, வட்டவுருட்டு எனவும், பட்டன. இவ் வட்ட வுருட்டு மிக எளிதில் உருளக் கூடியதாதலின் உருளை யாயிற்று.

25. Decimal-ஒன்றைப் பத்துப் பங்கிட்டு, அப்பங்குகளி விருந்து எடுக்கப்பட்டவற்றைக் குறிப்பதாதலின், பதின்பகுப்பு எனவும், Decimal notation-பதின்பகுப்புக் குறியீடு என்பது சுருங்கிப், பதின் குறியீடு எனவும் பட்டன.

26. Diameter-(வட்டத்தின் மிகப்பெரு) விட்டம்.

27. Divided by (÷)-ஆல். 4÷3, அதாவது நான்கை மூன்றால் வகு என்பதைச் சுருக்கி, நான்கு ஆல் மூன்று எனவும், 4×3, அதாவது நான்கை மூன்றால் பெருக்கு என்பதைச் சுருக்கி நான்கு ஐ மூன்று எனவும், இவ்வாறே, 4+3 என்பதை நான்கு

கூட மூன்று எனவும், 4 — 3 என்பதை நான்கு கழி மூன்று எனவும், Whole divided by என்பதை முழுஆல் எனவும் வாசித்தல் எளிதாம். இக்குறியீடுகளைப் பயன்படுத்தி வாசிக்கு முறையைப் பின்னர்க் காட்டுதும்.

28. Dividend-வகுக்கப்படு மெண் என்பதைச் சுருக்கி வகுபடு மெண் எனல் எளிதாம்.

29. Dynamics-இயக்கவியல். Statics- நிலைப்பொருளியல் எனப்படுதலின், Dynamics இயங்கு பொருளியல் எனப்படுதலே பொருத்தமுடைத்து.

30. Estimate-மதிப்பு ; Value-பெறுமானம் அல்லது மதிப்பு ; Price-விலை; Cost-அடக்கம், எனக்கொளல் முறையாம்.

31. Exception-விலக்கு. புறனடை யென்பது இலக்கண வழக்கு.

32. Gallon-காலன் என்பதினும் கலன் சிறந்தது ; கலம் என்னும் கூல வளவைக்குச் சிறிது வேறுபட்டதாதலின்.

33. Gram-குறிப்பிட்ட தண்ணீரின் நிறைக்குச் சீர் செய்யப்பட்ட ஓர் எடையாதலின், சீரெடை.

34. Graph-கட்டப் படம், Graph paper-கட்டத்தாள் என்பது பொருத்தமுடைத்து; கட்டங் கட்டமாக வுள்ள தாளாதலினும், அதில் வரையப்படும் படமாதலினும்.

35. Hypotenuse-செஞ்சிறை ; செங்கோண எதிர் சிறையென்பதின் சுருக்க மாகும்.

36. Image-படிவம் ; படிவதாதலின்.

37. Inference-தேர்ந்து கொளப்படுவதாதலின், தேற்றப்பாடு ; Experiment- செயற்பாடு ; Observation- தோற்றப்பாடு, என மோனைப்படுத்திப் பயன் படுத்தல் இனிமை பயக்கும்.

38. Intersect-ஊடறு; Cut-வெட்டு; Meet-சந்தி.

39. Line-வரை; வரையப்படுவ தாதலின். கோடு நீளத்துடன் அகலமுமுடையதாகவும், வரை நீளமட்டுமுடையதாயும் அகல மற்றதாகவுங் கொளல் புது வழக்காம். (இனிப் புதிதாய் வழக்கிற்குக் கொண்டுவரற் பாலதைப் புது வழக்கெனக் கொள்க).

40. Measure-Unit of-அளவை யலகு. (Unit-அலகு. பின்னர்க் காண்க).

41. Median-சமவெட்டி என்பது சாலும்.

42. Method-முறை; Rule-விதி; Principle-முறைமை; Process-செய்முறை; Way-வழி; Path-பாதை; Route-செல்வழி, எனக் கொளல் முறையாம்

43. Minimum-மீச்சிறிது; Maximum-மீப்பெரிது; Little-சிறு; Less-மிகச்சிறு; Least-மீச்சிறு; Great-பெரு; Greater-மிகப்பெரு; Greatest-மீப் பெரு, எனவும், 'மிக' என்பதனை மிகு பாகை (Comparative Degree)-யையும், 'மீ' என்பதனை மீப்பாகை (Superlative Degree)-யையுங் குறிக்கும் முன்விகுதி (Prefix) ஆகக் கொளல், காரணமுடைய புது வழக்காம். (Degree பாகத்தைக் குறிப்பதாதலின், பாகை); Positive Degree-தனிப்பாகை; Degree of Comparison-ஒப்புமைப் பாகை என்பனவும் புது வழக்குகளே.)

44. Multiple-யாதாமொன்றின் மடங்காதலின், மடங்கை.

45. Operation-செய்கை அல்லது செய்பாடு; Experiment-செயற்பாடு; Deed-செயல், என வேறுபடுத்திக் கொளல் பயனுடைத்து.

46. Point-நீள அகல மற்றது குற்று; உற்றது புள்ளி எனக் கொளல் புது வழக்கு.

47. Quantity-கணிக்கப்படுவது கணியம்.

48. Ratio-இரு கணியங்களுக்குள்ள தகவலைக் குறித்தலின், தகவு.

(தொடரும்)

---